Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 கதிர் : 95 | செவ்வாய்க்கிழமை 01 மார்ச் 2022 | மாசி 17 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 | விலை: 30/=

முல்லைத்தீவில் வெடிபொருள்கள் நிரப்பிய தற்கொலை படகு மீட்பாம்! (விரிவு - பக்:3)

## இன்று மின்வெட்டு 3 மணிநேரம்

கொழும்பு, மார்ச் 1
நாடளாவியரீதியில் இன்று காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5 மணிவரையான காலப் பகுதிக்குள் 3 08

## திரிபோசாவும் இனி இல்லை

கொழும்பு, மார்ச் 1
கைக்குழந்தைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வழங்குவதற்கு சுகாதார அமைச்சின் களஞ்சியசாலைகளில் தற்போது 14

## பஸிலுக்கு எதிரான மற்றொரு வழக்கும் மீளப்பெறப்பட்டது

கொழும்பு, மார்ச் 1
அரச நிதியை முறையற்ற விதத்தில் பயன்படுத்திய குற்றச்சாட்டில் கடுவளை நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கிலிருந்து 15

# எண்ணெய்க் கப்பல்களை விடுவிக்க டொலர் இல்லை

## அமைச்சர் கம்மன்பில கைவிரிப்பு



கொழும்பு, மார்ச் 1
எண்ணெய்க் கொள்வனவுக்காக டொலரை தொடர்ச்சியாக வழங்க நிதி அமைச்சு உறுதியளித்திருந்தபோதிலும், அது தற்போதுவரை நடைமுறையாகவில்லை. அரசு முன்னுரிமைக்குரிய விடயம் எதுவென்பதை சரியாக விளங்கிக் கொள்ளவேண்டும் - இவ்வாறு வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். 14

## டீசல், மண்ணெண்ணெய் வடக்கிலும் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 1
டீசல் மற்றும் மண்ணெண்ணெய்க்கு வடக்கிலும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. யாழ்ப்பாண நகரைத் தவிர்ந்த வடக்கின் ஏனைய பகுதிகளில் டீசல் மற்றும் 15

## தனியார் பஸ்களுக்கும் இ.போ.ச. சாலைகளில் டீசல்

### இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 1
பொதுப் போக்குவரத்தில் இயங்கும் தனியார் பஸ்களுக்குத் தேவையான எரிபொருள் இலங்கைப் போக்குவரத்து சபைக்குச் சொந்தமான டிப்போக்களில் இருந்து வழங்கப்படும் என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.
டீசல் தட்டுப்பாடு காரணமாக தனியார் பஸ்கள் சேவையில் ஈடுபடுவதில் ஏற்பட்டுள்ள தடைகளைக் கருத்திற் 13

## பேக்கரி உற்பத்தியும் விரைவில் முடங்கலாம்

கொழும்பு, மார்ச் 1
மூலப்பொருள்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டால் பேக்கரி உற்பத்தி விரைவில் முடக்கம் அடையக்கூடும் என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரி 08

## நிரந்தர அரசியல் தீர்வுக்கு சர்வதேச வாக்கெடுப்பு!

### ஐ.நா. மனித உரிமை ஆணையாளருக்கு 5 தமிழ்க் கட்சிகள் கூட்டாகக் கடிதம்

யாழ்ப்பாணம், மார்ச் 1
நிரந்தர அரசியல் தீர்வு கிடைக்காமையால் தமிழர்கள் மீண்டும் மீண்டும் படுகொலை செய்யப்பட்டு வருவது இனப்படுகொலைக்கு சமம் என்பதை நாங்கள் 15



## பாப்பரசரை சந்தித்தார் பேராயர் மல்கம் ரஞ்சித்

கொழும்பு, மார்ச் 1
வத்திக்கானுக்கு பயணம் மேற்கொண்டுள்ள பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை திருத்தந்தை பரிசுத்த பாப்பரசர் 14

## கிளிநொச்சியில் விபத்து ஒருவர் உயிரிழப்பு

கிளிநொச்சி, மார்ச் 1
கிளிநொச்சி, கரடிப்போக்குச் சந்தியிலிருந்து சுமார் 5 மீற்றர் தூரத்திலுள்ள கால்வாயிலிருந்து சடலம் ஒன்று நேற்று மீட்கப்பட்டுள்ளது. விபத்து ஒன்றில் உயிரிழந்தவரே இவ்வாறு கால்வாயில் சடலமாக மீட்கப்பட்டதாகப் பொலிஸார் கூறுகின்றனர்.
சடலமாக மீட்கப்பட்டவர் கிளி 14

## உக்ரைன் - ரஷ்யா நேற்று நேரடிப் பேச்சு

### இரு தரப்பும் நிபந்தனைகள் விதிப்பதால் குழப்பம்

கீவ், மார்ச் 1
உக்ரைன் மீது ரஷ்யா கடுமையான தாக்குதல் நடத்தி வரும் நிலையில் இரு தரப்பினரிடையே அமைதிப் பேச்சு நேற்று மாலை 4 மணிக்கு 15

## சிவராத்திரி விரதத்துக்கு ஜனாதிபதி, பிரதமர் வாழ்த்து

கொழும்பு, மார்ச் 1
இந்துக்களால் சிவனுக்காக கடைப்பிடிக்கப்படும் மகா சிவராத்திரி விரதத்துக்கு ஜனாதிபதி கோத்தாபய மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஆகியோர் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர்.
'அனைவரையும் துன்பத்திலிருந்து விடுவிப்பதே, மனித குலத்தைத் தாண்டிய தெய்வீகப் பிரார்த்தனையாக உள்ளது. சிவபெருமானைநினைத்து விரதமிருந்து, சிவராத்திரி தினத்தன்று பெற்றுக்கொள்ளப்படும் ஆன்மீக 15

## நகுலேஸ்வரத்துக்கு பஸ் சேவை

யாழ்ப்பாணம், மார்ச் 1
கீரிமலை, நகுலேஸ்வரர் ஆலயத்தில் இன்று இடம்பெறும் தேர்த் திருவிழா மற்றும் இரவு இடம்பெறும் மகா சிவராத்திரி உற்சவத்துக்கு செல்லும் பக்தர்களின் நன்மை கருதி இலங்கைப் போக்குவரத்துச் சபையின் 08

## கடல்வளத்தை அழிக்கும் இழுவைமடிக்கு அனுமதி

### கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 1
இழுவைமடித் தொழில் காரணமாக கடல்வளம் அழிவடையும் என்று கடற்றொழிலாளர்கள் தெரிவித்துவரும் நிலையில், இழுவைமடி 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக நீக்கவேண்டும்!

## இடதுசாரித் தலைவர்கள் வலியுறுத்து

**கொழும்பு, மார்ச் 1**

**நாட்டில் நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச்சட்டம் முழுமையாக நீக்கப்படவேண்டுமென தென்னிலங்கையிலுள்ள சிரேஷ்ட இடதுசாரி தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.**

'திருத்தம்' என்ற போர்வையில் அச்சட்டத்தை நீடித்துக்கொள்வதற்கு அரசால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கையை தோற்கடிக்க நாட்டு மக்கள் அணி திரள வேண்டும் என நவசமசமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன மற்றும் ஐக்கிய சோஷலிஸக் கட்சியின் தலைவர் ஸ்ரீதுங்க ஜயசூரிய ஆகியோர் அறைகூவல் விடுத்துள்ளனர்.

1979 ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தை திருத்துவதற்கான சட்ட வரைவு, வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸால் பெப்ரவரி 10ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

'முன்பிருந்த சட்டத்துக்கும், புதிய சட்டத்துக்கும் இடையில் பெரிய மாறுபாடுகள் எதுவும் இல்லை.' என எதிரணிகளும், சிவில் அமைப்புக்களும் சுட்டிக்காட்டியுள்ளன. இந்த நிலையில் புதிய சட்ட வரைவுக்கு எதிராகவும், பயங்கரவாத தடைச்சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் கையெழுத்து திரட்டப்பட்டுவருகின்றது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய உட்பட சிரேஷ்ட அரசியல் பிரமுகர்கள் பலரும் இதில் கையொப்பமிட்டுள்ளனர். இடதுசாரித் தலைவர்களும் தற்போது களத்தில் இறங்கியுள்ளனர்.

'பயங்கரவாத மற்றும் அரச விரோதச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் நோக்கிலேயே அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனவால் பயங்கரவாத தடைச்சட்டம் கொண்டுவரப்பட்டது. தற்போது நாட்டில் போர் இல்லை. 3 தசாப்தங்களில் சமூகத்தில் பல மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன. அதேபோல ஜனநாயகத்தை ஒடுக்குவதற்கான கருவியாக இந்தச்சட்டம் ஆட்சியாளர்களால் பயன்படுத்தப்பட்டுவந்துள்ளது. எனவே, அந்தச்சட்டம் முழுமையாக நீக்கப்படவேண்டும். திருத்தம் என்பது நாடாமாகும்' என்று ஸ்ரீதுங்க ஜெயசூரிய உதயனிடம் தெரிவித்தார்.

'பயங்கரவாத தடைச்சட்டத்தினை நீக்குவதன் ஆரம்பக்கட்ட நடவடிக்கையாக திருத்தம் மேற்கொள்ளப்படுகின்றதெனில் அதை வரவேற்கலாம். எனினும், அந்தச்சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும்.' என்று கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்தார்.

அதேவேளை, பயங்கரவாத தடைச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டுமென ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவும் வலியுறுத்தியுள்ளது. ஐரோப்பிய ஒன்றியமும் இதே நிலைப்பாட்டில்தான் உள்ளது. (எ-44)

---

நாட்டில் ஜனவரி–பெப்ரவரியில்

## 434 விபத்துக்களில் 457 பேர் உயிரிழப்பு

கொழும்பு, மார்ச் 1

நாட்டில் கடந்த ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் பெப்ரவரி 25ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 434 வீதி விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன எனவும் இதில் 457 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

மேலும் ஒரு வாரத்தில் இடம்பெற்ற 43 வீதி விபத்துக்களில் 44 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

---

## மதுபானம் விற்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 1

சட்டவிரோத மதுபான விற்பனையில் ஈடுபட்ட ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஊர்காவற்றுறை, புளியங்குளத்தைச் சேர்ந்த ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடம் இருந்து 750 மில்லிலீற்றர் சீல் செய்யப்பட்ட மதுபானம் கைப்பற்றப்பட்டுள்ளது.

வீட்டில் வைத்து மதுபானம் விற்பனை செய்யப்படுவது தொடர்பில் ஊர்காவற்றுறைப் புலனாய்வுப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. (எ-23)

---

## பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு அனைத்து மக்களுக்கும் எதிர்ப்பு

### உடன் நீக்க வேண்டும் என்று சாணக்கியன் எம்.பி. வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 1

பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும் என சிங்கள மற்றும் முஸ்லிம் சகோதரர்களும் தற்போது வலியுறுத்த ஆரம்பித்துள்ளனர். கால அவகாசம் கோராமல் அந்தச்சட்டத்தை அரசு உடன் நீக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான இரா.சாணக்கியன் தெரிவித்தார். நாட்டில் நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச்சட்டத்தை முழுமையாக இரத்துச் செய்ய வேண்டும் என்று கோரி நாடு தழுவிய ரீதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கையெழுத்துச் சேகரிப்பு நடத்திவருகின்றது. மட்டக்களப்பில் நேற்று முன்தினம் கையெழுத்து திரட்டப்பட்டதுடன், பயங்கரவாத தடைச்சட்டத்துக்கு எதிராக கவனவீர்ப்புப் போராட்டமும் முன்னெடுக்கப்பட்டது.

அதில் கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்ததாவது;

பயங்கரவாத தடைச்சட்டத்துக்கு எதிராக தமிழ் மக்கள் மட்டுமே போராடி வந்த நிலையில் தற்போது முஸ்லிம் மற்றும் சிங்கள சகோதரர்களும் அதற்கு பேராதரவை வழங்குகின்றனர். வீதியில் இறங்கி போராடுகின்றனர். இந்தச் சட்டம் நீக்கப்படும்வரை எமது போராட்டம் ஏதோவொரு விதத்தில் தொடர்ந்து கொண்டுதான் இருக்கும் என்பதைக் கூறிவைக்க விரும்புகின்றோம்.

உடனடியாக இதைச் செய்ய முடியாது, கால அவகாசம் வேண்டுமென நீதி அமைச்சர் தெரிவித்துள்ளார். அவரின் இந்தக்கூற்றை ஏற்க முடியாது. கால அவகாசம் எல்லாம் வேண்டாம், கொடூரச் சட்டமான பயங்கரவாத தடைச்சட்டம் உடன் நீக்கப்பட வேண்டும் -என்றார். (எ-44)

---



இந்திய கடற்படையின் அதிநவீன நீர்மூழ்கல் (டைவிங்) பயிற்சிக் கப்பலான 'Nireekshak' எனும் கப்பல், இலங்கைக் கடற்படையினருக்கு கடல்சார் நீர்மூழ்கல் பயிற்சிகளை வழங்குவதற்காக நேற்றுத் திருகோணமலை துறைமுகத்தை வந்தடைந்தது. (எ-இ)

---

## எரிபொருள் தட்டுப்பாட்டால் எரிவாயு விநியோகம் தடை

கொழும்பு, மார்ச் 1

எரிபொருள் தட்டுப்பாட்டால் எரிவாயு விநியோகம் தடைப்பட்டுள்ளதாக லிட்ரோ எரிவாயு விநியோகஸ்தர்கள் தெரிவித்துள்ளனர்.

லிட்ரோ நிறுவனம் எரிவாயு விநியோகஸ்தர்களுக்கு குறைந்தளவிலான எரிவாயு சிலிண்டர்களை மட்டுமே வழங்குகின்றது. எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக எரிவாயுவை விநியோகிக்க முடியாதுள்ளது என்று எரிவாயு நிறுவனம் அறிவித்துள்ளது. தேவைக்கு ஏற்ப மொத்தமாக எரிவாயுவை நிறுவனம் வழங்குவதில்லை என்று எரிவாயு விநியோகஸ்தர்கள் மேலும் தெரிவித்தனர்.

---

## கசிப்பை உடைமையில் வைத்திருந்தோர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 1

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இருவேறு பகுதிகளில் கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் கோப்பாய் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஊரெழு கிழக்குப் பகுதியில் கசிப்பை உடைமையில் ஒருவர் வைத்திருக்கிறாரென கோப்பாய் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொண்ட சோதனையில் ஆயிரத்து 500 மில்லிலீற்றர் கசிப்பு அவரிடமிருந்து மீட்கப்பட்டுள்ளது.

மேலும் கோண்டாவில் பகுதியில் கோப்பாய் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் 750 மில்லிலீற்றர் கசிப்புடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ச-இ)

---



## கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 1

அல்லைப்பிட்டி மூன்றாம் வட்டாரத்தில் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில், 24 வயது இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகத்துக்கு இடமான முறையில் வீதியில் நின்ற இளைஞரைச் சோதனையிட்டபோது அவரிடம் இருந்து 2 கிராம் 400 மில்லிகிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட இளைஞர் விசாரணைகளின் பின்னர் ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவில் மீட்கப்பட்ட தற்கொலைத்தாக்குதல் படகு

**யாழ்ப்பாணம், மார்ச் 1**

**முல்லைத்தீவு சாலைக்கடற்கரை பகுதியில் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் தற்கொலைத் தாக்குதல் படகு ஒன்று நேற்று மீட்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.**



மறைத்து வைக்கப்பட்டிருந்த இந்தப் படகு, இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து மீட்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

மீட்கப்பட்ட படகை வெட்டிச் சோதனையிட்டபோது, படகில் வெடிபொருள்கள் நிரப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது என்று இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை இராணுவத்தினரும், பொலிஸாரும் முன்னெடுத்து வருகின்றனர். (எ-20)

# வவுனியாவில் விபத்து இருவருக்குக் காயம்!



வவுனியா, மார்ச் 1

வவுனியா ஏ-9 வீதி விளக்குவைத்தகுளம் பகுதியில் நேற்றுமுன்தினம் உழவியந்திரத்துடன் மோட்டார் சைக்கிள் மோதிய விபத்தில் இருவர் காயமடைந்தனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புளியங்குளம் பகுதியில் இருந்து ஓமந்தை நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் முன்னே சென்ற உழவியந்திரத்தை முந்திச் செல்ல முற்பட்டபோது விபத்துக்குள்ளாகியது.

இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் காயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை ஓமந்தை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-ரி1-110)

# எரிபொருளை சிக்கனப்படுத்துக

*கல்வி அமைச்சர் கோரிக்கை!*




கொழும்பு மார்ச் 1

'நாங்கள் எரிபொருள் உற்பத்தி செய்யும் நாடு அல்ல' அதனால் முடியுமானளவு நாங்கள் எரிபொருளை சிக்கனப்படுத்திக் கொள்ளவேண்டும் என்று கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

எமக்குத் தேவையான மின்உற்பத்தியை நீர் மின் உற்பத்தி அல்லது வேறு முறைமைகளை கைவிட்டு டீசல் மூலமான மின் உற்பத்தி நடவடிக்கையை நீண்டகாலமாக மேற்கொண்டுவந்ததால் இன்று பெரியளவில் மின் பிரச்சினைக்கு நாடு முகங்கொடுக்கவேண்டி ஏற்பட்டிருக்கின்றது.

இந்த நிலைக்கு மின் பொறியியலாளர்களே காரணமாகும். அதனால் மின்சார சிக்கனம் மற்றும் சூரிய வெப்ப மின் உற்பத்தியை உடனடியாக ஆரம்பிக்க வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ய-இ)

# அரசியல் தலையீட்டால் சந்தேகநபர் விடுவிப்பு

*அச்சுவேலியில் சம்பவம்*

யாழ்ப்பாணம், மார்ச் 1

காணி உரிமையாளரைத் தாக்கினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஒருவர் அரசியல் தலையீட்டால் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படாமல் விடுவிக்கப்பட்டுள்ளார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் கடந்த சனிக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

பலாலிவீதி பத்தமேனி பகுதியிலுள்ள காணியை அதன் உரிமையாளர் துப்புரவு செய்து கொண்டிருந்தபோது, குறித்த காணியில் உரிமைகோரி வந்த ஒருவர் உரிமையாளருடன் முரண்பட்டு, அவரைக் கடுமையாகத் தாக்கியுள்ளார்.

இதையடுத்து காயமடைந்த உரிமையாளர் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தமைக்கு அமைவாக சந்தேக நபர் உடனடியாகக் கைதுசெய்யப்பட்டார். அவரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்தபோது அரசியல்வாதியொருவரின் தலையீட்டில் அவர் விடுவிக்கப்பட்டுள்ளார். இதையடுத்து பாதிக்கப்பட்டவர் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று பொறுப்பதிகாரியுடன் முரண்பட்டதுடன், உயர் பொலிஸ் அதிகாரியின் கவனத்துக்கும் கொண்டு சென்றுள்ளார் எனத் தெரியவந்துள்ளது. (வ-23)

# புதினம் தெரியுமோ?

பட்ட காலிலேயேபடும், கெட்ட குடியே கெடுமெண்டு சொல்லுறது உண்மைதான் போல. இந்த வருசம் எங்கட கண்டறியாத அரசாங்கம் மின்னாமல் முழங்காமல் திடீரெண்டு உரத்தை இறக்குமதி செய்ய ஏலாது எண்டு தடைபோட்டதால, விவசாயிகள் படுகிறபாடு கொஞ்சநஞ்சமில்லை.

உரமோ, மருந்தோ இல்லாததால, அதுகளுக்குப் பழக்கப்பட்டு போன நம்பர் நெல் இனங்களை ஏதோ ஒருமாதிரி விதைச்சு, பயிராக்கினால் மழை வெள்ளம் போட்டு மூடிட்டுது. பிறகு அதுக்குள்ள தப்பினதுகளை நோய் வந்து தாக்கிச்சு. அதிலையும் தப்பினதுகளில வந்த கதிரோ முந்தி வாறதின்ர அரைவாசியும் இல்லை. எண்டாலும் ஒரேயொரு ஆறுதல் என்னெண்டால், வழக்கத்தைவிட இந்த முறை நெல்லை கூடுதல்விலை குடுத்து தனியார் வாங்கினதுதான். அதால கொஞ்சமெண்டாலும் நஷ்டத்தைக் குறைக்கலாம் எண்ட நப்பாசையோட இருந்த கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியாப் பக்க விவசாயிகளுக்கு இப்ப டீசலும் ஆப்பு வைச்சிருக்கு.

டீசலுக்கும், நெல்லுச் செய்தவைக்கும் என்ன சம்பந்தம் எண்டு நீங்கள் நினைப்பியள். இப்ப ஏக்கர் கணக்கில நெல்லுச் செய்யிறவை ஆக்களைப் பிடிச்சு அரிவி வெட்டுறேலை. எல்லாம் மிசின் வெட்டுத்தான். ஆக்களைப் பிடிச்சு வெட்டுறதெண்டால் குடுக்கிற காசை விடவும் அரைவாசிக் காசோட மிசினால அரிவி வெட்டிப்போடலாம். மினக்கேடுமில்லை. இப்ப வாற வியாழக்கிழமையில இருந்து வடக்கில கடும் மழைக்கு சான்ஸ் இருக்கெண்டு அறிவிச்சிருக்கினம். அதுக்கிடையில கதிர் முத்தி இருக்கிற நெல்லை வெட்டாட்டி எல்லாம் அம்போதான். அதால அவசர அவசரமா நெல்லு வெட்டுற மிசினைப் பிடிச்சுக் கொண்டுவந்தால்.... ஒரு இடமும் டீசல் இல்லை. கடல்லையே இல்லையாம் எண்டுற அளவுக்கு டீசலைக் கண்ணிலையும் காண ஏலாமக் கிடக்கு. வயல் இருக்கு, பயிர்இருக்கு, கதிர்இருக்கு, மிசின் இருக்கு,ஆனால் டீசல் மட்டும் இல்லை -எண்டு ஒப்பாரி வைக்காத குறையாக நெல்லு விதைச்சவை எல்லாம் ஏங்கிப் போய்க்கிடக்கினம்.

இவ்வளவு உரப்பிரச்சினைக்கு நடுவிலையும், கஷ்டப்பட்டுக் கிடைச்ச விளைச்சலைக் கூட இப்ப கண்ணுக்கு முன்னாலை பறிகுடுக்க வேண்டியிருக்கே எண்டு வேதனைப் படுகினம். உந்த கமநல சேவை நிலையங்கள், விவசாயத் திணைக்களங்கள் இப்பிடி டீசல் இல்லாமல், நெல்லை வெட்ட ஏலாமல் அந்தரிக்கிற விவசாயிகளுக்கு ஏதும் மாற்று வழி செய்யமாட்டினமோ...?



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கண்ணீர் அஞ்சலி

எமது யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி
உதவி ஆணையாளர் அலுவலக
உத்தியோகத்தர் **ப. தவப்பிரியன்**
அவர்களின் அன்புத் தந்தையாகிய
**திருநாவுக்கரசு பரமசிவம்**
அவர்களின் பிரிவால் ஆழ்ந்த துயர் அடைவதுடன்
அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவித்துக்கொள்கின்றோம்.

யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலக
உத்தியோகத்தர், நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்.

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை சுன்னாகம்

## ஏல விற்பனை

வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்குரிய பின்வரும் பாவித்த பொருட்கள் பகிரங்க ஏலத்திற்கு விற்கப்படவுள்ளன.

காலம் : 15.03.2022 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணி
இடம் : தலைமை அலுவலகம், வலி தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.

**பொருட்கள் விபரம்**

இலத்திரனியல் பொருட்கள், வாகன பற்றிகள், உலோகப் பொருட்கள், மின்னியல் பொருட்கள், தளபாடப் பொருட்கள், வாகன ரயர்கள்.

**நிபந்தனைகள்**

01. ஏலதாரராக கலந்து கொள்பவர் ரூபா 100.00 மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக செலுத்துதல் வேண்டும் மு.ப. 10.00 பின்னர் ஏலதாரர் பதிவுகள் மேற்கொள்ளப்படாது.
02. சித்தியடைந்த ஏலத்தார் அன்றைய தினமே ஒப்புக் கொண்ட ஏலத்தொகை முழுவதையும் செலுத்திப் பொருட்களை அலுவலகத்தில் இருந்து அகற்றுதல் வேண்டும்
03. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம் தொலைபேசி இலக்கம் 0212240017

க.தர்சன்
தவிசாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.

(CR 37161) (3/6)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
19 - 07 - 1947

சிவன் அடியில்
05 - 03 - 2019



அமரர்

## பொன்னையா கந்தசாமி

(யாழ். பல்கலைக்கழகத்தின் ஓய்வுநிலை பதில் பதிவாளர். யாழ் மருத்துவ பீடத்தின் ஓய்வு நிலை சிரேஷ்ட பதிவாளர். கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயில். கைதடி இனுங்கித் தோட்டம் கந்தசுவாமி கோயில். கைதடி மாதாஜி லிங்கேஸ்வரர் கோயில் என்பவற்றின் சபை உறுப்பினர். கைதடி கிழக்கு சனசமூக நிலையத்தின் முன்னாள் செயலாளர். அதன் முன்பள்ளியின் ஆலோசகர்)

அன்பினிலே மிகுந்தவராய் பண்பினிலே சிறந்தவனாய்
மண்ணிலே உதித்து அமைவுற்ற வாழ்வினில்
நறுமணம் பரப்பி இல்லத்தில் விருட்சமாய் பாசநிழல்
தந்தையாய்
உறவுகள் பேணிடும் கருணை வடிவமாய் உரிமையாய்
உணர்வை அன்பாய் பகிர்ந்தே
விண்ணக வாழ்வை நாடியே சென்றீர்கள்
மூன்றாண்டு பறந்தோடிச் சென்றிருந்தாலும்
என்றென்றும் உங்கள் பாதம் போற்றியே
வாழ்ந்திடுவோம்.

"புஸ்ப பவனம்"
கைதடி கிழக்கு,
கைதடி.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(cs.18504) (2.6)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## விளையாட்டு விருதுகள் விழா 2019

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு விருதுகள் விழா 12.03.2022 (சனிக்கிழமை) அன்று பி.ப.3.00 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உள்ளக விளையாட்டு அரங்கில் இடம்பெறவுள்ளதனால் 2019ஆம் ஆண்டிற்கான யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு அணிகளைப் பிரதிநிதித்துவப்படுத்திய மாணவர்கள் தங்களது முழுப்பெயர் மற்றும் தற்போது பாவனையிலுள்ள முகவரி, கைத்தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் முகவரி ஆகிய விபரங்களை 05.03.2022இற்கு முன்பதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உடற்கல்வி அலகின் phyeduj@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரியூடாக வழங்கி உதவுமாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(CR 37163) (3/6)

# INVITATION FOR BID 2022/01
## Regional Directorate of Health Service Jaffna.

1. The **Chairman, Regional Procurement Committee**, on behalf of the Regional Directorate of Health Services, Jaffna, invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.
4. Qualification' requirements are indicated in section 4 of the Bidding document. Additional details are provided in the Schedule (Section 5) for SBD 3 documents and in the Bidding Data & Contract Data (Section 5) for SBD 1 Documents.
5. Interested bidders may obtain further information from **address given below in 6** and inspect the bidding documents at the same place on any working days from 09.00 hrs to 15.00 hrs.
6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Regional Directorate of Health Services,No 572/3 Hospital Road Jaffna. (T.P:0212227889, Fax:0212220822) from 9.00 a.m. to 15.00 p.m. during the period mentioned in the table upon payment of non-refundable fees as mentioned in the table.** The method of payment should be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Regional Procurement Committee, Regional Directorate of Health Services, No 572/3 Hospital Road, Jaffna** on or before 10.30 a.m at the date mentioned in the table below. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at Conference Hall, Regional Directorate of Health Services, 572/3 Hospital Road, Jaffna on commencing at 2.30 P.M on the date mentioned in the table.
9. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Table.

| CATEGORY I | Document Issuing/Purchasing Period | | | | From02.03.2022 until 15.03.2022 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | Pre-Bid Conference | | | | At 2.30 P.M on 09.03.2022 | | |
| | Closing and Opening of Bids | | | | At 10.30 A.M on 16.03.2022 | | |
| | | | | | | Required Bid Security | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.)In Million(without VAT) | Contract Period | Grade Required | Non-Refundable Fees | Security Amount | Validity Period |
| NP/04/41/2022/PSSP/W/01 | Improvements of Internal Road-Health Deaprtment ,Pannai Jaffna. | 1.04 | 71Days | C9 and C8 (Highway) | 1,500.00 | 11,000.00 | Till 01.06.2022 |
| NP/04/41/2022/PSSP/W/02 | Construction of Vehicle park (Type I) Pannai. | 1.41 | 74Days | C8 and C7 (Buildings) | 1,500.00 | 15,000.00 | Till 01.06.2022 |
| NP/04/41/2022/PSSP/W/03 | Repair and Renovation of Office Building-MOH Kayts. | 1.49 | 75Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 15,000.00 | Till 01.06.2022 |
| NP/04/41/2022/PSSP/W/04 | Construction of Vehicle park (Type II) Pannai. | 1.06 | 71Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 11,000.00 | Till 01.06.2022 |
| NP/04/41/2022/PSSP/W/05 | Improvement of RDHS Office at Jaffna | 0.13 | 16 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 1,500.00 | Till 01.06.2022 |
| NP/04/41/2022/PSSP/W/06 | Sever Room Partition Work at BH Point Pedro. | 0.1 | 12 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 1,000.00 | Till 01.06.2022 |
| NP/04/41/2022/PSSP/W/07 | Repair and Renovation of GHC Building Uduththurai, and Office Building MOH Maruthankerny | 0.98 | 70 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 10,000.00 | Till 01.06.2022 |
| NP/04/41/2022/PSSP/W/08 | Repair and Renovation of GHC Building at Sempiyanpattu and Kudaththanai | 1.47 | 75 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 15,000.00 | Till 01.06.2022 |

"Bidding will be conducted through National Competitive Bidding (NCB). Since the Estimated Value of Work to be performed under this procurement (excluding VAT and other taxes) is below Rs. 50 Mn., regional preference and CIDA grade preference shall apply as stipulated in Public Finance Circular No. 04/2016 (iii)" and Public Finance Circulars No 03/2020 and 03/2020(i) dated ,09.10.2020 and 11.01.2020 respectively will also be adopted.

**Chairman,**
**Regional Procurement Committee,**
**Regional Directorate of Health Service,**
**Jaffna.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதனப்பெயர்மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் -11 மூத்தவிநாயகர் கோவில் வீதி ஆதன இல 66/26 என்ற இலக்கத்தைக் கொண்ட ஆதனம் செல்லையா இராசையா பெண் திரவியம் என ஆதன வரிப்பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகின்றது.

நல்லையா ஜெயராகாவும் பெண் மனோன்மணி உம். செல்வராசா பெண் நாகேஸ்வரி பிரசித்த நொத்தாரிசு கனகரட்னம் கேசவன் முகதாவில் 7702ம் இலக்க 08.08.2004ம் திகதியிட்ட அறுதி உறுதி மூலம் குறித்த ஆதனத்தை புலேந்திரன் பெண் ரஜனி என்பவருக்கு அறுதியாக வழங்கியுள்ளார்.

குறித்த 7702 ஆம் இலக்க உறுதியில் தாயுறுதியின் விபரம் பற்றி குறிப்பிடும் போது 1933.03.25ம் திகதி பிரசித்த நொத்தாரிசு க.சுப்பிரமணியம் முன்பாக 3453ஆம் இலக்கத்தில் எங்களின் 2ம். 3ம் பெயரின் மாதா காலஞ்சென்ற செல்லையா இராசையா பெண் திரவியம் பெயரில் நிறைவேறிய சீதன உறுதிப்படி எங்கள் 2ம். 3ம் பெயர்களின் மாதா வழி முதுசமும் எங்கள் நெடுங்கால தடையற்ற ஆட்சியுமாயுடைய தென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் தொடர்பாக யாழ்ப்பாணம் காணிப்பதிவகத்தில் உள்ள ஆவணங்களில் பிரசித்த நொத்தாரிசு V.K. சுப்பிரமணியம் அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 3453ம் இலக்க 1933.03.25ம் திகதிய உறுதி தொலைந்துவிட்டதால் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ் ஒன்றை வழங்கமுடியாதுள்ளது என்பதை மேலதிக காணிப்பதிவாளர் உறுதிப்படுத்துகின்றார்.

பின்னர் நாகமுத்து சின்னத்தம்பி குலேந்திரனும் ரஜனி உம் பிரசித்த நொத்தாரிசு கனகரத்தினம் கேசவன் முகதாவில் 11417ம் இலக்க 24.02.2010ம் திகதியிட்ட நன்கொடை உறுதி மூலம் குறித்த ஆதனத்தை செல்வரத்தினம் ரவீந்திரன் என்பவருக்கு நன்கொடையாக வழங் கியுள்ளார்.

**ஆதன விபரம்:** வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி நல்லூர் கோவிற் பற்று நல்லூர் இறை "இராமன்வளவு" நிலப்பரப்பு 02 இதில் 1ஆம் 2ஆம் பெயர்களுக்குரிய 1/2 பங்குக்கு அமைவாக மறு பங்காளர்களுடன் மனமொத்து நிந்தமாகப்பிரித்து நெடுங்காலத் தடைகள் எதுவுமின்றி ஆட்சி பண்ணி வரும் 10.02.2010ந் திகதி உத்தரவு பெற்ற உலாந்தா திரு.ந.கேதீஸ்வரன் அவர்களால் அளந்து வரையப்பட்ட 1164ம் இலக்க படத்தில் சுட்டிய முதலாம் இலக்கத்துண்டு நிலப்பரப்பு 0 குளி 16.39 (பதினாறு தசம் மூன்று ஒன்பது) உம் "பயிர் வகைகளும்.

**இதற்கு எல்லைகள்:**

கிழக்கு. வடக்கு :- இராசேந்திரன் பெண் பூமணியின் ஆதனம்.

தெற்கு:- பொன்னையா பெண் மாணிக்கத்தின் ஆதனம்.

மேற்கு:- ஒழுங்கை முழு ஆதனத்தின் வடகிழக்கே சின்னட்டி சபாபதியின் காணிக்குள்ளிருக்கும் கிணற்றில் இதற்குரிய பங்கும் வழமையான வழிவாய்க்கால் பாவிப்புரித்தும். இதடங்கலும்

தற்போது செல்வரத்தினம் ரவீந்திரன் என்பவர் இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு முழுவதிற்கும் உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது செல்வரத்தினம் ரவீந்திரன் என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப் படும். இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**விஸ்வலிங்கம் மணிவண்ணன்**
**கௌரவ முதல்வர்,**
**மாநகரசபை.**

(cr.37158) (2.6)

# பெறுகை அறிவித்தல்
# சாவகச்சேரி பிரதேசசபை - கொடிகாமம்

2022/2023 (ஏப்ரல் 5/2022 - ஏப்ரல் 4/2023) ஆம் காலப்பகுதிக்கான தனியார் சாரதி சேவைக் கான விலை மனுக்கோரல்

தலைவர். பிரதேசசபை. பெறுகைக்குழு அவர்களினால் சாவகச்சேரி பிரதேசசபையில் 2022/2023 (ஏப்ரல் 5/2022 - ஏப்ரல் 4/2023) ஆம் ஆண்டுக்கான சாரதி சேவையினை வழங்குவதற்கு தகை மையுள்ள சேவை வழங்குநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படு கின்றன.

| இல | சாரதி சேவை தேவைப்படும் இடம் | தேவைப்படும் சாரதிகளின் எண்ணிக்கை | வேண்டப்படும் பாதுகாப்பு பிணை | |
|---|---|---|---|---|
| | | பகல் | பாதுகாப்புப் பிணை தொகை | செல்லுபடியாகும் காலம் |
| 1 | தலைமை அலுவலகம், சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம் | 1 | ரூ 10000.00 | 14.03.2022-29.05.2022 |
| | மொத்தம் | 1 | | |

- தனியார் சாரதி சேவையை வழங்குநர்கள் சாரதி சேவை வழங்கலுக்கான வியாபாரப்பதிவு டைய ஒரு நபராகவோ அல்லது ஒரு நிறுவனமாகவோ இருத்தல் வேண்டும் என்பதுடன் குறைந்தது 3 ஆண்டுகள் இச் சேவையை வழங்கியதற்கான அனுபவம் இருத்தல் வேண்டும்.
- சேவை வழங்குநர்களின் தலைமைக் காரியாலயம் அல்லது கிளைக் காரியாலயம் யாழ் மாவட்டத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.
- சேவை வழங்குநர்களின் தனியார் சாரதி பெறுகைக்கான ஆங்கிலத்தில் மட்டும் உள்ள பெறுகை ஆவணத்தை சாவகச்சேரி பிரதேசசபை. கொடிகாமத்தில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் 01.03.2022 தொடக்கம் 13.03.2022ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி முதல் பி.ப 3.00 மணிவரை மீளளிக்கப்படாத வைப்புப்பணமாக ரூ 2000.00 (Vat நீங்கலாக ) ஐச் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.
- பெறுகை ஆவணங்கள் 14.03.2022ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்பதாக கிடைக் கக் கூடியவாறு "தலைவர். சாவகச்சேரி பிரதேசசபை. கொடிகாமம்" என்னும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். பெறுகைப்பத்தி ரங்கள் அனைத்தும் பெறுகைநேர முடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் பெறுகைதாரரோ அல்லது அவரால் எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ள அனுமதிப்படுவர்.
- கிடைக்கப்பெற்ற பெறுகைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப் பதற்கும் மீள் பெறுகை கோரலைக் கோருவதற்கும் பெறுகைக் குழு தலைவருக்கு அதிகாரம் உள்ளது.

**திரு. கந்தையா வாமதேவன்**
**தலைவர்**
**பெறுகைக்குழு**
**சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்.**
**2022.03.01**

(cr.37157) (2.6)

# கண்ணீர் அஞ்சலி



## திரு. சதாசிவம் சிவராசன் (சிவா)

செல்லப் பேச்சில் சொல்லித் தழுவும் - உன்
மகிழ்வின் தருணங்கள்
அஞ்சித் தவிக்குதடா உன் குடும்பம்
என்னதான் அவசரமோ ?
எங்கு சென்றாய் எமை விட்டு
உடைந்துருகும் உறவுகளை
என்ன சொல்லித் தேற்றுவது?
கொடிய காலனவன் விழிதான் குருடாகிப்
- போனதுவோ!
எம் சிவராசன் தேகமதை உனதாக்க
- நினைத்து விட்டாய் எமதர்மா நீ !
ஆறாத்துயருடன் ஆடிச்சாய்ந்ததய்யா உன் இல்லம்!



தோற்றம் 20.10.1973

மறைவு 27.02.2022

**E.S.P. கணேசலிங்கம் குடும்பத்தினர்**
இ.ச.பேரம்பலம் சக நிறுவனம்,
50, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருக்கேதீச்சரத்தான் அருள் பெருகிட
பிரார்த்திப்போம்
மணமகள்
நகை மாடம்
சுத்தமான 22 கரட்
தங்க நகைகளுக்கு
நாடவேண்டிய இடம்
எங்கும் இல்லாத
விலைக்கழிவுடன்
அதி நவீன
புத்தம்புதிய டிசைன்கள்.
கலை நயத்திற்கும்
பாரம்பரியத்தின் அழகிற்கும்,
சின்னங்களாய் விளங்கும்
எண்ணிலடங்கா
மயக்கவைக்கும் வடிவங்களுடன்
நாச்சிக்குடா சந்தி,
முழங்காவில்.
077 938 4143
021 228 3114



# திருக்கேதீச்
# மகா சிவராத்திரி

## திருக்கேதீச்சர

திருக்கேதீச்சரம் அல்லது திருக்கேதீசுவரம் இலங்கையின் மேற்குக் கடற்கரைப் நாட்டுத் தலங்களில் ஒன்றாகும்.

| | | |
|---|---|---|
| சிவனின் பெயர் | : | மகாபலேஸ்வரர், பிராணலிங்கேஸ்வரர், ஆத்மலிங்கேஸ்வரர் அம் |
| பெயர் | : | கவுரி தல |
| விருட்சம் | : | வன்னி மரம் |

**கோவில் சிறப்பு :**

திருக்கேதீச்சரம் அல்லது திருக்கேதீசுவரம் இலங்கையின் மேற்குக் கடற்கரைப் பகுதியிலுள்ள துறைமுக நகரமான மாதோட்டத்தில் அமைந்துள்ளது. நாயன்மார்களின் தேவாரப் பாடல் பெற்ற சுந்தரமூர்த்தி நாயனாரும் இத்தலத்தின் மீது பதிகம் பாடியுள்ளார்கள். தேவாரப் பாடல் பெற்ற தலங்

**வரலாற்றுச் சுருக்கம் :**

"கேது வழிபட்ட தலமாதலால் திருக்கேதிச்சரமாயிற்றென ஆய்வாளர்கள் கூறுகின்றனர்" இக் துவட்டா பிள்ளைப் பேறின்றித் திருக்கேதீச்சரத்தில் உள்ள பாலாவித் தீர்த்ததில் நீராடிக் கேதீச்சரத் வாழத்தலைப்பட்டு அவ்விடத்தைப் பெருநகராக்கினார். துவட்டாவில் உருவாகியமையால் து வழங்கிவந்தது. இத்தலதிலமைந்துள்ள பாலாவித் தீர்த்தத்தில் நீராடி இறுதிக்கடன் புரிவோர்க்கு தீருமென்பதும் ஐதீகம்.

இந்நாட்டுப் பழங்குடியினராய நாகர்களது முக்கிய வழிபாட்டுத் தலமாதலால் இத்திருக்கோ திருப்பணி களை இத்திருக்கோயிலிற்காற்றிய பெருமையும், வன்னி, யாழ்ப்பாண அரசர்கள் நித் ஏழாம் எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞான சம்பந்த மூர்த்தி நாயானாராலும், சுந்தர மூர் அருள்மிகு திருநாவுக்கரசு சுவாமிகள் அவர்களின் திருதாண்டகத்திலும், சேக்கிழார் பெருமானின்

இத்திருத்தலத்தை அண்டிய பகுதிகளில் பல சிவாலயங்களிருந்தமையை அகழ்வாய்வுத் தர பல்துறைத் தொழில் வல்லவர்கள் வாழ்ந்த நகரமாகவும் சிற்பம் கலை நுணுக்கம் நிறைந்த ஆற்ற தெரிவித்துள்ளனர்ஜமேற்கோள் தேவை. திருக்கேதீச்சரத் திருதலத்திற்கணித்தாய் வங்காலை பெருங்கப்பல்கள் கட்டுமிடமாகவுமிருந் துள்ளமையயும், வேறு மாளிகைத் திடல் என்னும் பாப்பாமோ வாழ்விடமாய் இருந்தமையால் அது பாப்பாமோட்டையெனவும் மாடமாளிகைகள் மிளிர்ந்தமையா

ஆர்வலர் ஒருவர் பகைவரால் கவரப்படாதிருத்தற் பொருட்டு கலிங்கத்தேயத்திலிருந்து கொண் கழித்ததாகவும் வரலாறுண்டு.

மஹா சிவராத்திரியில் சிவனருள் பெருகிட பிரார்த்திப்போம்
1960 ஆம் ஆண்டு முதல் முன்னணியில் இயங்கும்
சாரங்கா நகை மாடம்
இல. 157/1 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 6972, 021 222 8869
நியூ சாரங்கா ஜுவலரி
இல. 46 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 0737
சாரங்கா
நாணய மாற்று சேவை
WESTERN UNION MONEY TRANSFER
Ria
Hotline : 077 357 7212

மஹா சிவராத்திரியில் சிவனரு
V.T.A கடல்
மன்னார் வீதி, நாச்சிக்குடா
இங்கே சகல விதமான மீன்பிடி உபகர
யிணைப்பு இயந்திர உதிரிப்பாகங்களை
077 644 5910, 07

KIRUBA LEARNERS
கிருபா லேணர்ஸ்
KIRUBA LEARNERS
Govt.Approved A Grade Driving Trainig School
No. 1 Driving Training School In North
தலைமைக் காரியாலயம்
இல.226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353 071 4546 960
0777225292
DS.589 அரச அங்கீகாரம் பெற்ற A தர கனரக சாரதிப் பயிற்சிப்பாடசாலை



சிறந்ததோர் சாரதி எப்போதும்
வீதி ஒழுங்கு பற்றி விழிப்புடன் இருப்பார்.
வட மாகாணத்தின் முதற் தர சாரதிப் பயிற்சிப் பாடசாலை
மஹா சிவராத்திரி சிவனருள்
பெருகிட பிராத்திப்போம்
★ குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
★ மும்மொழிகளிலும் வாகனப் பயிற்சி.
★ இரவு நேர வாகனப் பயிற்சி.
★ எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
★ தவணை முறைக் கட்டணங்கள்.
★ அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
★ அனைத்து கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்
கிளைக் காரியாலயங்கள்:
யாழ்ப்பாணம்
227/6, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம், (மதவடி அருகில்) 021 224 2022, 071 4546 956
முதலாம் கட்டைச் சந்தி, பருத்தித்துறை. 021 492 3201, 071 4546 961
36, கச்சேரி நல்லூர் வீதி, (கச்சேரி அருகில்) யாழ்ப்பாணம். 021 222 6699, 076 722 5292
ஓம்பிளாசா, பருத்தித்துறை வீதி, ஆவரங்கால். 021 222 6688, 071 777 6969
கே.கே.எஸ் வீதி, தெல்லிப்பளைச் சந்தி, தெல்லிப்பளை. 021 224 3737, 071 4546 959
கண்டி வீதி, சாகவச்சேரி, (நீதிமன்றம் அருகில்) 021 227 0700, 071 4546 957
பிரதான வீதி, (பொலிஸ் நிலையம் முன்பாக), நெல்லியடி. 021 300 6550, 071 4546 958
182, இராமநாதன் வீதி, திருநெல்வேலி. 021 221 4488, 0777 227 740
காரைநகர் பிரதான வீதி, சித்தங்கேணி. 021 225 2500, 076 212 1299
வவுனியா
216, ஏ9, வவுனியா. (வசந்தி திரையரங்கு முன்பாக) 024 222 7777, 0777 100 444
மன்னார்
94, பிரதான வீதி, மன்னார். 023 225 1656, 077 847 2732
கிளிநொச்சி
ஏ9 வீதி, கிளிநொச்சி. (கச்சேரி முன்பாக) 021 228 5505, 071 454 6955
புளியடிச்சந்தி, முல்லை வீதி, விசுவமடு. 021 320 1515, 077 8585 263
நாச்சிக்குடா சந்தி, மன்னார் வீதி, முழங்காவில். 021 300 6544, 070 333 6161
வாடியடி சந்தி, பூநகரி. 021 320 1818, 070 333 7171

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இனியொரு முடக்கம்?

இலங்கை இப்போது எரிபொருள் பற்றாக்குறையால் திக்கித் திணறிக் கொண்டிருக்கின்றது. எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே வழங்கப்படுகின்றன என்று நுகர்வோர் விசனிக்கின்றனர். சில எரிபொருள் நிரப்பு நிலையங்களின் எரிபொருள் கையிருப்புக்கள், குறிப்பாக டீசல், மண்ணெண்ணெய் என்பன தீர்ந்துள்ளதால் அந்த நிலையங்கள் மூடப்பட்டுள்ளன.

நுகர்வோர் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளபோதும் அரசாங்கமும், அரசாங்க அதிகாரிகளும் அதற்கு எதிர்மாறான கருத்துக்களையே வெளியிட்டிருக்கின்றனர். பொதுமக்களின் செயற்பாடுகளாலேயே செயற்கை எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படுகின்றது என்பது அவர்களின் வாதம். அரசாங்கமும், அரசாங்க அதிகாரிகளும் கூறுவதை முற்றாக மறுத்துவிடவும் முடியாது. ஆனால் நுகர்வோர் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் அரசாங்கமும், அரசாங்க அதிகாரிகளும் உண்மைகளை மக்களிடம் இருந்து மறைக்கின்றனரோ என்ற சந்தேகத்தையே ஏற்படுத்துகின்றன.

நுகர்வோர் டீசலைப் பெறுவதில் இப்போது பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர். பெற்றோல், மண்ணெண்ணெய் போன்றவற்றைப் பெற்றுக்கொள்வதிலும் பல இடங்களில் நெருக்கடிகள் ஏற்பட்டிருக்கின்றன. சாதாரண மக்கள் முதல் பெரும் நிறுவனங்கள், திணைக்களங்கள்வரை இந்த நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க வேண்டியிருக்கின்றது.

டீசல் தட்டுப்பாடு காரணமாக பொதுப் போக்குவரத்துச் சேவைகள் கூட ஸ்தம்பிக்கும் நிலை ஏற்பட்டிருக்கின்றது. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன எரிபொருள் நிரப்பு நிலையங்களில் டீசல் இல்லாததால், தாங்கள் அதிக விலைக்கு ஐ.ஓ.சியில் டீசலைப் பெற வேண்டியிருக்கின்றது என்று தனியார் பஸ் உரிமையாளர்கள் கூறியிருக்கிறார்கள். தங்களுக்கான நிவாரணங்கள் வழங்கப்படாவிட்டால் இன்று முதல் பொதுப் போக்குவரத்து ஸ்தம்பித நிலையை அடையும் என்று அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சம்மேளனம் கூறியிருக்கின்றது.

வடக்கிலும், நாட்டின் ஏனைய பகுதிகளிலும் அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடும் நிறுவனங்களும் எரிபொருள் தட்டுப்பாட்டால் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளன. கனரக இயந்திரங்கள், வாகனங்களின் இயக்கங்கள் எரிபொருள் பற்றாக்குறையால் தடைப்பட்டுள்ளன. இந்த நிலைமை இன்னும் ஓரிருநாள்கள் தொடர்ந்தால் அபிவிருத்திப் பணிகளை இடைநிறுத்த வேண்டியிருக்கும் என்று அந்த நிறுவனங்கள் கூறுகின்றன.


மறுபுறத்தில் எரிபொருள் தட்டுப்பாட்டால் நாட்டின் மின் விநியோகமும் சீர்குலைந்துள்ளது. நாளாந்தம் நாட்டில் பல மணிநேர மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றது. மின் விநியோகம் சீர்குலைந்துள்ள நிலையில், அது உள்ளூர் உற்பத்தித் திறன், பொருளாதாரம் என்பவற்றில் நேரடியாகவே தாக்கம் செலுத்தும். இவ்வாறு சங்கிலித் தொடராக பிரச்சினைகள் நீண்டு கொண்டு செல்கின்றன.

அத்தியாவசியச் செயற்பாடுகள் படிப்படியாகச் செயலிழந்து செல்லும் போக்கே இப்போது நாட்டில் காணப்படுகின்றது. ஆனால் அரசாங்கம் நாட்டில் எந்தப் பிரச்சினையும் இல்லை என்ற போக்கிலேயே செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. அல்லது உண்மைகளை மக்களிடம் மறைத்து, தங்கள் அரசியல் இருப்பைத் தக்கவைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றது. ரோம் நகரம் தீப்பற்றி எரிந்தபோது நீரோ மன்னன் பிடில் வாசித்தமை போன்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச இப்போதும், அரசியல் பேசிக்கொண்டிருக்கிறார். அரசாங்கத்தின் இந்தச் செயற்பாடுகள் நாட்டை மீள முடியாத கட்டத்துக்குள் தள்ளிவிடுமே தவிர ஒருபோதும் நன்மையைத் தரப்போவதில்லை.

நாடு எதிர்கொண்டிருக்கும் பிரச்சினைகளை வெளிப்படுத்தி அதற்கான தீர்வைப் பெறுவதற்கு அனைத்துத் தரப்பினரையும் இணைத்துச் செயற்படவேண்டிய காலகட்டமே இது. அதை உணர்ந்து அரசியல் ஆதாய நோக்கங்களைத் துறந்து செயற்பட வேண்டியது அரசாங்கத்தினதும், அரசாங்கத்தில் இணைந்திருப்போரினதும் கடமை. அதைப் புரிந்து கொண்டு செயற்பட்டால் மட்டுமே நாடு எதிர்கொள்ளும் பிரச்சினைகளை ஓரளவுக்கேனும் சமாளிக்க முடியும் என்பதே உண்மை. இல்லையேல் கடந்தவருடங்களில் கொரோனா நெருக்கடியால் நாடு முடக்கப்பட்டதைப்போல, விரைவில் எரிபொருள் நெருக்கடியாலும் நாடு முடங்கும் அபாயத்தைத் தடுக்க முடியாமற்போய்விடும்.

## நாளொரு நல்வார்த்தை

"துன்பங்கள் அனுபவித்த காலத்தை மறந்துவிடு. ஆனால் அது உனக்குக் கற்பித்த பாடத்தை மறந்துவிடாதே"
- பெஞ்சமின்.



### ரயில்வே திணைக்களத்தில் -

# 5 நாள்களுக்கு மட்டுமே எரிபொருள் கையிருப்பு!



**கொழும்பு, மார்ச் 1**

**ஐந்து நாள்களுக்குத் தேவையான எரிபொருள் மாத்திரமே கையிருப்பில் உள்ளது என ரயில்வே பொதுமுகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
ரயில்வே திணைக்களத்தில் தற்போது கையிருப்பிலுள்ள எரிபொருள் 50 சத வீதமாக குறைவடைந்துள்ளது. ரயில்வே திணைக்களம் வசமுள்ள எரிபொருளின் அளவு குறைந்தாலும், ரயில் போக்குவரத்தில் பாதிப்பு ஏற்படாது. ரயில் போக்குவரத்துக்காக நாளொன்றுக்கு ஒரு லட்சம் லீற்றர் எரிபொருள் தேவைப்படும் நிலையில், நாளாந்த கொள்முதல் அடிப்படையிலேயே ரயில்வே திணைக்களத்துக்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எரிபொருளை வழங்கி வருகின்றது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ய-இ)

### எரிபொருள் தட்டுப்பாட்டால்

# தனியார் பஸ்கள் சேவை குறைப்பு

கொழும்பு, மார்ச் 1
எரிபொருள் கிடைக்காததாலும், எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் நீண்ட வரிசையில் காத்திருக்க நேர்ந்துள்ளதாலும் தனியார் பேருந்துச் சேவைகள் குறைக்கப்பட்டுள்ளன.
இது தொடர்பில் தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்ததாவது:-
எரிபொருள் கிடைக்காததாலும், எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் நீண்ட வரிசையில் காத்திருக்க நேர்ந்துள்ளதாலும் தனியார் பேருந்துச் சேவைகளில் பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. இதனால் இன்று முதல் (நேற்று) இலங்கை தனியார் பஸ் சேவைகள் குறைக்கப்படவுள்ளன. இலங்கையிலுள்ள அனைத்து தனியார் பேருந்துகளும் நாளொன்றுக்கு ஓட்ட எண்ணிக்கையில் 50 வீதமாகக் குறைக்கப்படும்.
அத்துடன் எரிபொருள் விநியோகம் மற்றும் விலை நிர்ணயம் தொடர்பான பிரச்சினைகளை அரசு நிவர்த்தி செய்ய வேண்டும். தனிப்பட்ட வாகனங்களுக்கு பதிலாக, எரிபொருள் நிரப்பும்போது பஸ் உரிமையாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும் - என்றார். (ய-இ)

### விரைவில்

# இலங்கை முழுவதும் முடங்கும் அபாயம்

கொழும்பு, மார்ச் 1
பொருளாதார நிலைமைகள் காரணமாக ஒட்டுமொத்த இலங்கையும் விரைவில் முடங்கும் அபாயநிலை ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.
நாட்டில் நிலவும் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் எரிபொருள் பற்றாக்குறை, மின்சாரம் மற்றும் மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் அவற்றுடன் தொடர்புடைய பல துறைகள் பெரும் பாதிப்பைச் சந்தித்துள்ளன. இப்படியான தொரு சூழ்நிலையில் விரைவில் இலங்கை முழுவதும் முடங்கும் அபாயம் ஏற்படலாம் என்று வல்லுநர்கள் எச்சரித்துள்ளனர். (ய-இ)

02.03.2022
செவ்வாய்க்கிழமை
மாசி 18
சுபநேரம் : 04.57 - 06.27
ராகுகாலம்: 12.27 - 01.57

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உக்ரைனின் அணுஉலை மீது ரஷ்யா ஏவுகணைத் தாக்குதல்



**மொஸ்கோ, மார்ச் 1**
**உக்ரைன் தலைநகர் கீவ்வில் உள்ள அனு உலை மீது ரஷ்யா ஏவுகணைத் தாக்குதல் நடத்தியுள்ளது என ஐக்கிய நாடுகள் சபையின் அனுசக்தி கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.**

உக்ரைன் மீது ரஷ்யா போர்தொடுத்து நேற்றுடன் 5 நாள்கள் கடந்துள்ளன. உக்ரைனின் முக்கிய நகரங்கள் மீது குண்டுகளை பொழிந்தும் இராணுவ நிலைகளை குறிவைத்தும் ரஷ்யா இந்த அதிரடியில் ஈடுபட்டுள்ளது. இந்தநிலையில் உக்ரைன் தலைநகர் கீவ்வில்உள்ள அணு உலை கழிவு மீது ரஷ்யா ஏவுகணைத் தாக்குதல் நடத்தியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. அணு ஆயுதத் தடுப்புக் குழுவினரை தயாராகுமாறு நேற்று முன்தினம் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் உத்தரவிட்டுள்ள நிலையில் இந்த ஏவுகணைத் தாக்குதல் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## பேக்கரி...

வித்துள்ளது.
சங்கத்தின் தலைவர் என்.கே.ஜெயவர்தன தெரிவித்ததாவது,
சில மாதங்களாக கோதுமைமாவுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டால் தொழில்துறை பெரும் சுமையை எதிர்கொண்டுள்ளது. தற்போது ஏனைய மூலப் பொருள்களுக்கும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. எரிபொருள் தட்டுப்பாட்டால் ஜெனரேட்டர்களை பயன்படுத்த முடியாத நிலையில், மின்வெட்டால் பேக்கரி பொருள்களின் உற்பத்தியும் பாதிக்கப்பட்டுள்ளது - என்றார். (ஒ-வ-இ)

## நகுலேஸ்வரத்துக்கு...

பேருந்து சேவைகள் தொடர்ச்சியாக இடம்பெறும் என்று வடக்கு மாகாண பிரதம முகாமையாளர் எஸ்.குணபால செல்வம் தெரிவித்தார். (அ-ஒ-27)

## இன்று...

மணித்தியால மின்வெட்டு நடைமுறைப் படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-இ)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** பணியிடத்தில் இருந்த சிரமங்கள் விலகி, நிம்மதி ஏற்படும். ஏமாற்றங்கள் தொடரும். பணியாளர்கள் பொறுமை காக்க வேண்டும். வாகன வகையில் செலவு ஏற்படும். வம்புகளில் ஈடுபட வேண்டாம்.

**இடபம்:** எதிர்பாராத நிகழ்வால் மகிழ்ச்சி ஏற்படும். வியாபாரிகளுக்கு நன்மை உண்டு. தாமதங்களை தவிர்க்க இயலாது. வீண்பழி ஏற்படாமல் தப்புவீர்கள்.

**மிதுனம்:** யோகம் உண்டாகும். குடும்பத்தினருடன் ஒற்றுமை அதிகரிக்கும். வியாபாரத்தில் புதிய கூட்டாளிகளை சேர்க்க வேண்டாம். வியாபாரிகளுக்கு இலாபம் கிடைக்கும்.

**கடகம்:** குழந்தைகள் தங்களுடைய பொறுப்பை அறிந்து செயற்படுவர். புதிய வாகனம் வாங்குவீர்கள். அதன் மூலம் லாபம் கிடைக்கும். சமீபத்தில் மாறியிருக்கும் வீடு உங்களுக்கு மகிழ்ச்சியைத் தராது.

**சிம்மம்:** எதிர்பாராதவை நிகழும். குழந்தைகளால் பிரச்சினைகள் ஏற்படும். கூடுதல் வருமானம் மகிழ்ச்சி அளிக்கும். நட்பு வட்டம் விரிவடையும். மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்வீர்கள்.

**கன்னி:** உறவினர்கள் இடையே இருந்து வந்த பிரச்சினை தீரும். யாருடனும் வீண் வாக்குவாதம் செய்ய வேண்டாம். நிலுவைப் பணிகளை செய்து முடித்து நிம்மதி அடைவீர்கள்.

**துலாம்:** பிறரை நம்பி எந்தவொரு விடயத்திலும் ஈடுபடாமல் இருப்பது உத்தமம். சுபநிகழ்ச்சி பற்றிய பேச்சில் இருந்த தாமதம் நீங்கும். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் சுமாராகத்தான் இருக்கும்.

**விருச்சிகம்:** மற்றவர்களை அனுசரித்து சென்று நன்மை காண்பீர்கள். நீண்ட நாளாக இருந்து வந்த பிரச்சினைகள் தீரும். பணவரவு அதிகரிக்கும். பயணங்களால் மகிழ்ச்சி கிடைக்கும்.


**தனுசு:** சலிப்பும் கவலையும் தீரும். தடைகளை கண்டு தளரமாட்டீர்கள். சகபணியாளர்களின் ஒத்துழைப்பால் பணிச்சுமை குறையும். பணவரவு தடைப்படாது. பங்குதாரர் மூலம் நிம்மதி கிடைக்கும்.

**மகரம்:** வருத்தம் நீங்கும். எதிர்காலக் கவலை தீரும். முயன்ற விஷயங்கள் தாமதமானாலும் அது நல்லபடியாக முடியும். சகபணியாளர்களுடன் இருந்து வந்த பிரச்சினை தீரும்.

**கும்பம்:** பிரச்சினை தீரும். பிறருக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். பண விவகாரங்களில் இருந்த அதிருப்தி நீங்கும். முயற்சியில் வெற்றி உண்டு. மற்றவர்கள் பிரச்சினைகளில் தலையிடவேண்டாம்.

**மீனம்:** அக்கம்பக்கத்தினர் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள். நிம்மதி கூடும். தம்பதி இடையே ஒற்றுமை அதிகரிக்கும். குழந்தைகளுக்கு உங்களின் ஆலோசனைகள் உதவும்.

## 31 ஆம் நாள் நினைவலைகள்



அன்னை மடியில் 19.12.1947
ஆண்டவன் அடியில் 01.02.2022

பத்தாவுக்கேற்ற பதிவிரதையாக வாழ்ந்து
இத்தரையைவிட்டகன்று இறைவன்
மடியில் ஆனந்தத்துயில் புரியும்
உத்தமி அன்னை
அமரர் திருமதி

## சோதிலிங்கம் இராஜேஸ்வரி

திதி நாள்

சீர் மிகுந்த பிலவ சிறப்புமிகு தையதனில்
நேர் மிகுந்த வளர் பிரதமையே - பார்போற்றும்
பண்பார் இராஜேஸ்வரியெனும் அன்னையவர்
மண்ணக வாழ்வை நீத்த திதி.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (01.03.2022) செவ்வாய்க்கிழமை காலை 08.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 03.03.2022 வியாழக்கிழமை பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிராத்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பினை எல்லோரும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு வேண்டுகின்றோம்.

**INVITATION FOR THE 31st DAY ATHMASHANTHI RITUALS PRAYER AND LUNCH**

We look forward to Have Your Kind Presence On The Occasion of
**Alms Giving Ceremony**
Of Our Beloved
**Late Mrs. Rajeswary Sothilingam**
to be Held on Thursday The 03rd March 2022 From 11.00 A.M
At Our Residence.
Kindly accept this as an individual invitation

"[illegible]"
பருத்தித்துறை வீதி,
[illegible], நீர்வேலி.

சோதிலிங்கம்
குடும்பத்தினர்
மற்றும் உறவினர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மஹா சிவராத்திரி

தலைவர்
காரைநகர் மணிவாசக சபை
ஈழத்துச் சிதம்பரம்.

நிகழும் பிலவ வருட மாசித் திங்கள் 17ஆம் நாள் செவ்வாய்க்கிழமை (இன்று) மஹா சிவராத்திரி விரத தினமாகும். இத்தினம் ஆதியும் அந்தமும் இல்லாத அருட்பெரும் சோதி வடிவான சிவபெருமானுக்குரிய விரதமாகும். சைவ சமயத்தினருக்கு பெரும் சிறப்பான விரதமாகும். பன்னெடுங்காலமாக நம்நாட்டில் மேற்கொள்ளப்பட்டுவரும் விரதமாகும். சைவ மக்கள் அனைவரும் கடைப்பிடிக்க வேண்டிய விரதமுமாகும்.

சிவத்துடன் சம்பந்தப்படும் இராத்திரி சிவராத்திரி என்று சொல்லப்படுகிறது. சிவனுக்குரிய பலகோடி நாமங்களில் தலைசிறந்த நாமம் சிவன் என்பதாகும். சிவன் என்ற சொல்லுக்கு பேரின்பத்துக்குக் காரணன் என்றும் தூயதன்மையன் என்றும் பொருள் காண்பர் ஆன்றோர்கள். 'சிவனொடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை, அவனோடு ஒப்பார் இங்கு யாருமில்லார்' என்பது திருமூலர் திருமந்திரமாகும். அன்புதான் சிவம்! சிவம்தான் அன்பு; அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலாதவர்களாவர் என்றும் கூறியுள்ளார்.

தெய்வம் ஒன்று என்றாலும் தெய்வவேதங்கள் பல உள்ளன போன்று விரதங்களும் பலவாயின. சிவபெருமானுக்குரிய விரதங்கள் எட்டு. அவற்றுள் சிவராத்திரி வழிபாடு மிகவும் சிறப்பு மிகுந்தது. எல்லா விரதங்களையும் விட பல மடங்கு சிறந்தது. விரதத்தின் மகிமை சொல்லி அடங்காது.

புற இருளைப் போக்கிக் கொள்வதற்கு சூரியஒளி உதவுவது போல அக இருளைப் போக்கிக் கொள்ள நமக்கு உதவுவது சிவ ஒளியாகும். சிவ வழிபாடு செய்வதால் முற்பிறப்பில் செய்த வினைகள் இப்பிறப்பில் அழிந்துவிடும். சிவராத்திரி விரதம் மாசிமாதத்தில்வரும் தேய்பிறைக் காலமாகிய அபர பட்சத்தில் பதினான்காம் நாள் இரவு சதுர்த்தசிகூடிய தினத்தில் அனுஷ்ட்டிக்கப்பட்டு வருகின்றது.

இந்த விரதம் பற்றிய பல வரலாற்று உண்மைகள் உள்ளன. பிரமனும் திருமாலும் நான் பிரமம், நான் பிரமம் என்று தருக்கமிட்டுப் போர் புரிந்தனர். அந்த வேளையில் எம்பெருமான் ஒளிப்பிழம்பாகத் தோன்றினார். இந்த ஒளிப்பிழப்பின் அடிமுடி கண்டவரே உயர்ந்தவர் என்னும் அசரீரி ஒலி எழுந்தது. பன்றி உருவெடுத்து திருமால் மண்ணிடைப்புக, அன்னப்பறவை உருவெடுத்து பிரமா விண்ணை நோக்கிப் பறந்தார். அடிமுடி தேடுவதில் இருவரும் முனைப்பாகத் தேடியும் கண்டிலர். தம் ஆற்றாமையை உணர்ந்தனர். இறைவன் அருஉருவத் திருமேனியாகிய இலிங்கோற்பவ வடிவில் காட்சி கொடுத்து அவர்களின் அகந்தையைக் களைந்தார். இதனை அப்பரடிகள் தம் தேவாரத்தில்

**செங்கணாளனும் பிரமனும் தம் முளே**
**எங்கும் தேடித்திரிந்தவர் காண்கிலார்**
**இங்குற்றேன் என்று லிங்கத்தே தோன்றினான்**

**பொங்கு செஞ்சடைப் புண்ணிய மூர்த்தியே**

என்றும், திருவாசகத்தில் மாணிக்கவாசகரும்

**பிரமன் அரி என்று இருவரும் தம் பேதைமையால்**
**பரமம் யாம் பரமம் யாம் என்றவர்கள் பதைப்பு ஒடுங்க**
**அரனார் அழல் உருவாய் அங்கே அளவு இறந்து**
**பரமாகி நின்றவா தோள் நோக்கம் ஆடோமோ**

என்று சோதிவடிவான காட்சியையும் இலிங்கோற்பவத்தையும் காண்பிக்கின்றார்கள். இச்சோதி வடிவான நாளே சிவராத்திரி என்றும் சிவலிங்க வடிவில் காட்சி தந்த நடுஇரவே இலிங்கோற்பவ காலமாகும்.



விரதம் பற்றிய ஆறுமுகநாவலர் கூறுமிடத்து, மனம் பொறி வழி போகாது நிற்றல் பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம் வாக்குக் காயம் என்ற மூன்றினாலும் கடவுளை மெய்யன்போடு வழிபடுதல் விரதமாகும் என்றார்.

யான், எனது என்னும் செருக்கின்றி உண்ணாமை உறங்காது நோற்று அகத்தே இறைவனை நினைந்து திருவைந்து எழுத்தினை ஓதி வழிபடின் யான் இங்குற்றேன் யான் இங்குற்றேன் என்று எம்பெருமான் நம்முன்னே தோன்றுவார்.

இவ்விரதத்தை அனுஷ்டிக்க வேண்டியவர்கள் ஆசாரசீலர்களாக இருத்தல் வேண்டும். விரத தினத்துக்கு முதல் நாளில் ஒருபோது உணவு உண்டு இரவில் தரையில் நித்திரை செய்து விடியற்காலையில் எழுந்து நீராடிச் சிவாலயம் சென்று வழிபட வேண்டும். அன்று உணவையும் நித்திரையையும் முற்றாக ஒழித்தல் வேண்டும். இரவு நான்கு சாம காலங்களிலும் சிவ பூசை செய்ய வேண்டும். சிவபூசை செய்ய இயலாதவர்கள் நான்கு காலங்களிலும் சிவன் கோயில்களில் நடைபெறும் பூசைகளில் கலந்து தரிசிக்க வேண்டும்.

பக்தி பூர்வமாக திருவைந்தெழுத்தாகிய ஓம் நமசிவாய, சிவாயநம ஓம் என்னும் மந்திரத்தை ஓதிக் கொண்டே இருத்தல் வேண்டும். சிவராத்திரியில் சிறந்த நேரம் இலிங்கோற்பவ காலமாகும். இந்தக் காலம் 11.30 மணிக்கு மேல் 1 மணி வரையுள்ள காலப் பகுதியாகும். சிவனுடைய பூசைக்கு உகந்த காலமாகும்.

மறுநாள் காலை நீராடி வழிபட்டு அடியார்கள் சூழ பாரணை முடிக்க வேண்டும் என்பதே விரத விதியாகும்.

உபவாசம் இருக்க இயலாதவர்கள் பால் பழத்துடன் இருக்கலாம். இரவு முழுவதும் கண் விழிக்க இயலாதவர்கள் இலிங்கோற்பவ காலம் வரையும் கண்விழித்து இறை தரிசனம் செய்ய வேண்டும். இதனையும் ஆற்ற முடியாதவர்கள் தம்மால் இந்த விரதத்தை புறக்கணிக்காது தம் இயல்புக்குப் பொருத்தமாக உணவைக் குறைத்தும் நித்திரை விழித்தும் அனுஷ்டிக்க வேண்டும்.

உலகத்தில் சிறந்த செல்வம் படைத்தவர் சிலரும் வறுமையில் உழன்று வருந்துகின்றவர்கள் பலருமாக இருப்பதற்கு காரணம் இறைவனை நினைத்து நல்ல விரதங்களை நோற்பவர் சிலராவர். நோற்காதவர் பலராவர். முற்பிறப்பில் நல்ல விரதமிருந்து இறைவனை வழிபட்டவர்கள் இந்தப் பிறப்பில் சகல செல்வயோகம் மிக்க பெரும் வாழ்வில் வாழ்கின்றார்கள். அல்லாதவர்கள் நல்குரவில் அகப்பட்டு அல்லற்படுகின்றார்கள். இதனை தெய்வப்புலவர் திருவள்ளுவர்.

**இலர் பலர் ஆகிய காரணம் நோற்பார்**
**சிலர் பலர் நோலாதவர் (குறள் 270)**

என்று இரத்தினச் சுருக்கமாக விரதத்தின் சிறப்பை எடுத்துக் காட்டியுள்ளார். எனவே சைவ மக்களாகிய நாம் அனைவரும் சிவராத்திரி விரதத்தை அனுஷ்டித்து நல்லருள் பெறுவோமாக.

# 'அன்பே சிவம்' நூல் வெளியீடு

முல்லைத்தீவு, மார்ச் 1

அகில இலங்கை சைவ மகாசபையினால் வெளியிடப்படும் மருத்துவர் தியாகராஜா சுதர்மன் எழுதிய 'அன்பே சிவம்' என்ற நூலின் வெளியீடு இன்று முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

மாங்குளத்திலுள்ள அகில இலங்கை சைவ மகா சபை தலைமைக் காரியாலயத்தில் இந்த நூல் வெளியீடு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக இலங்கை தமிழ்ச் சைவப் பேரவையின் தலைவர் முன்னாள் நீதிபதி இ.வசந்தசேனன் கலந்துகொள்ளவுள்ளார். (ய-125)

# சிவராத்திரி நிகழ்வுகள்

கிளிநொச்சி, மார்ச் 1

பளை, இயக்கச்சி மல்வில் கிருஷ்ணர் கோவிலில் மகா சிவராத்திரி தின நிகழ்வு இன்று இரவு 7.30 மணிக்கு கோவில் முன்றிலில் இடம்பெறவுள்ளது.


கிளிநொச்சி மாவட்டச் செயலகப் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராகப் பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் சி.ச.கிருஷ்ணேந்திரன், சிறப்பு விருந்தினராக முல்லைத்தீவு கல்வி வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் இ.கணேசலிங்கம் ஆகியோர் கலந்துகொள்வர். (ச-9)

★ ★ ★ ★

கொடிகாமம், மார்ச் 1

சிவகுரு ஆதீனமும் இலங்கை முதலுதவிச்சங்க இந்து சமயத் தொண்டர் சபையும் இணைந்து நடத்தும் சிவராத்திரி நிகழ்வு நல்லூரில் அமைந்துள்ள சிவகுரு ஆதீனத்தில் இன்று மாலை 6 மணி முதல் நாளை புதன்கிழமை காலை 6 மணி வரை இடம்பெறவுள்ளது. சிவலிங்கப் பெருமானுக்கு அடியார்கள் தங்கள் கைகளினாலே அபிஷேகம் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. சிவலிங்கப்பெருமானுக்கு நான்கு காலப் பூஜைகள், பஜனை, கலை நிகழ்வுகள், ஆன்மிக அருளுரை போன்ற நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. அடியார்கள் அனைவரும் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு நிர்வாகத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (ய-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான நகுலேஸ்வர தேர்த்திருவிழா இன்று

■ காரை. எம்.பி.அருளானந்தம்

ஈழமணித்திருநாடு திருமூலரால் சிவபூமி எனப் போற்றப்படுவதற்கு பொருத்தம் யாதெனில் ஈழத்தில் பஞ்ச ஈஸ்வரங்கள் அமைந்திருக்கின்றன. அத்தகைய ஈஸ்வரங்களில் ஒன்றாகிய நகுலேஸ்வரத்தின் தேர்த்திருவிழா இன்றாகும். மூர்த்தி, தலம், தீர்த்தம், விருட்சம் ஆகியன அமைந்த திருத்தலம் நகுலேஸ்வரம். புராதன காலத்தில் நகுலேச பாசுபதர்களினால் இவ்வாலயம் அமைக்கப்பட்டதெனவும் ஐதீகமுண்டு. இராவணன் இலங்காபுரியை ஆட்சி செய்த காலத்தில் இந்தச் சிவன் ஆலயம் மிகச் சிறப்பாக விளங்கியதாக கைலாச புராணம் என்ற நூலிலே கூறப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண வைபவ மாலையில் நகுலேஸ்வரம் பற்றிய ஐதீகங்களையும் தொன்மையான சரித்திரக் குறிப்புக்களையும் அறியமுடிகின்றது.

**திருத்தம்பலேசுவரம்**

நகுல முனிவரின் வருகைக்கு முன் இவ்வாலயம் திருத்தம்பலேசுவரம் என விளங்கியிருக்கின்றது. இங்குள்ள இறைவன் திருத்தம்பலேசுவரர் என்றும் இறைவி திருத்தம்பலேசுவரி என்றும் அழைக்கப்பட்டனர். நகுல முனிவரின் கீரிமுகம் மாறிச் சுபாவமுகமாகியதன் தாக்கம் தலப்பெயரிலும் மாற்றத்தை உண்டாக்கிவிட்டது. திருத்தம்பலேசுவரம் கீரிமலை என்றானது. அங்குள்ள இறைவன் திருத்தம்பலேசுவரர் நகுலேஸ்வரர் எனவும் திருத்தம்பலேசுவரி நகுலாம்பிகை எனவும் அழைக்கப்பட்டனர்.

பஞ்ச ஈஸ்வரங்களில் திருக்கோணேச்சரமும் திருக்கேதீஸ்வரமும் புராதன வரலாற்றுப் பெருமைகள் எவ்வாறு கொண்டமைந்தனவோ அத்தகு பழமைச்சிறப்புக்களை கொண்டது நகுலேஸ்வரம். மகாபாரதத்திலே அருச்சுனன் தீர்த்த யாத்திரையை மேற்கொண்டு புண்ணிய தீர்த்த ஷேத்திரமான நகுல மலையைக் கொண்ட மணிப்புரத்துக்கு (யாழ்ப்பாணம்) வந்தான் என்று குறிப்பிடுவதிலிருந்து நகுலேச்சரத்தின் வரலாற்றுப் பெருமையை அறியமுடிகின்றது.

இந்தியா போன்ற நாடுகளிலிருந்து யாத்திரையை மேற்கொள்வோர் வழிபாடு செய்யும் யாத்திரைத் தலமாகவும் நகுலேஸ்வரம் விளங்குகிறது.



நகுல முனிவர் மாருதப்புரவீகவல்லி முசுகுந்தச் சக்கரவர்த்தி போன்ற தவசிரேஷ்டர்கள் வழிபட்ட தலம் நகுலேச்சரம்.

நகுலேஸ்வரத்துக்குரிய தலபுராணம் நகுலகிரிப்புராணமாகும். சோழ தேசாதிபதியாகிய திசையுக்கிர சோழன் மகள் மாருதப்புரவல்லி என்பவள் தனக்கிருந்த குன்ம வியாதியினால் மெலிந்தவளாய் வியாதியை வைத்தியர்களால் சுகமாக்க முடியாததனால் இனித் தீர்த்த யாத்திரையாடுதல் செய்து பார்த்தல் சுகம்வரவும்கூடும் என்றெண்ணிக் காவிரிப்பூம் பட்டினத்திலிருந்து புறப்பட்டு அங்குமிங்கும் போய்த் தீர்த்தமாடி வருகையில் சாந்தலிங்கன் என்னும் சன்னியாசியைக் கண்டு கொண்டாள்.

**இந்தியா போன்ற நாடுகளிலிருந்து யாத்திரையை மேற்கொள்வோர் வழிபாடு செய்யும் யாத்திரைத் தலமாகவும் நகுலேஸ்வரம் விளங்குகிறது.**

இலங்கையின் வடமுனையிலே கீரிமலை என்றொரு மலையுண்டு. அது சமுத்திர தீர்த்தத்திலுள்ளது. அங்கே உவர்ச்சல் மத்தியில் சுத்த தீர்த்தமும் மலையருவித் தீர்த்தமும் கலந்த உத்தம தீர்த்தம் ஒன்றுண்டு. உலகத்திலுள்ள எந்தத் தீர்த்தங்களிலும் முக்கிய தீர்த்தமயாயிருக்கின்றது. அதிலே நீ போய் நீராடிச் சிலகாலம் தங்கியிருந்தால் சுகமடைவாய் என்று சொல்ல அச்சொற்படி மாருதப்புரவீகவல்லி புறப்பட்டுத் தாதிமாருந் தோழிமாருந் சேனைவீரருந் சூழ்ந்து வரக் கீரிமலைச்சாரலில் வந்திறங்கி குமாரத்தி பள்ளமென்னும் இடத்தின் பாளயம் போட்டுக் கொண்டிருந்த நகுல முனிவரைக்கண்டு சாட்டாங்கமாக வணங்கி அவரிடம் ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டு அத்தல விசேடத்தையும் தீர்த்த மகிமையையும் அந்தத் தீர்த்தத்தில் ஆடித் தனக்குக் கீரி முகம் மாறின செய்தியையும் அம் முனிவர் சொல்லக் கேட்டு மகா சந்தோசத்துடன் தீர்த்தமாடிச் சிவாலய தரிசனம் செய்து வந்தாள்.

சில காலத்தில் அவளுக்கிருந்த குன்ம வலியுந் தீர்ந்து குதிரைமுகமும் மாறியது. மாறவே மருதப்புரவீக வல்லியின் யெவன சொரூபத்தைக் கண்டவர்கள் ஆச்சரியங்கொள்ளாதிருந்ததில்லை. அவளே தனது நன்றிக்கடனாக மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத் திருப்பணி களை நிறைவேற்றினாள். இத்தகு வரலாற்றுப் பெருமைகளைக் கொண்ட நகுலேஸ்வரத்திலே மூன்று பிரகாரங்களும் ஐந்து கோபுரங்களும் இருந்தன என்பது ஐதீகம்.

கி.பி. 16ஆம் நூற்றாண்டளவில் யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றிய போர்த்துக்கேயர் நகுலேஸ்வரம், நல்லூர்க் கந்தசுவாமி கோவில் மாவிட்டபுரம் கந்தசுவாமிகோவில் முதலிய ஆலயங்கள் யாவற்றையும் இடித்தழித்தனர். பின்னர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மற்றும் இந்துப்பொதுமக்கள், அந்தணர்கள் ஆகியோரின் முயற்சியால் மீண்டும் ஆலயம் புனரமைக்கப்பட்டு 1895ஆம் ஆண்டு முதன்முதலாக கும்பாபிஷே கம் நடைபெற்றது. அத்தகு மகிமை வாய்ந்த நகுலேஸ்வரப்பெருமானின் பிலவ வருஷ தேர்த்திருவிழாவான இன்று, மகாசிவராத்திரி திருநாளில் பெருமான் தேரேறி வருகின்றார். ■

---

# மகன் தாக்கியதில் தந்தை உயிரிழப்பு

கொழும்பு, மார்ச் 1

இரத்தினபுரி பதொட்ட பிரதேசத்தில் மகன் தாக்கியதில் தந்தை உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். பதொட்ட குருவிட்ட பிரதேசத்தை சேர்ந்த 57 வயதுடைய ஒருவரே உயிரிழந்தவராவார். தவறி விழுந்ததன் காரணமாக குறித்த நபர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்ட நிலையில், உயிரிழப்பில் சந்தேகமுள்ளதாக உயிரிழந்தவரின் மனைவி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். அதற்கமைய நேற்றுமுன்தினம் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், தனிப்பட்ட தகராறு காரணமாக உயிரிழந்தவரின் மகன் தாக்கியதிலேயே குறித்த நபர் உயிரிழந்தார் என்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து சந்தேக நபரான 22 வயதுடைய இளைஞன் கைது செய்யப்பட்டார். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை குருவிட்ட பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-ரி)

---

## மேல் மாகாணத்தில்

# தற்காலிக குடியேறிகள் தகவல்கள் சேகரிப்பு

கொழும்பு, மார்ச் 1

மேல் மாகாணத்தில் தற்காலிகமாக தங்கியுள்ளவர்களின் தகவல்களைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

நாட்டின் பல பாகங்களில் இருந்தும் மேல் மாகாணத்துக்கு வந்து தங்கியுள்ள தற்காலிக குடியிருப்பாளர்களில் 20 பேர் நாட்டின் பல்வேறு பகுதிகளில் குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

இதையடுத்து, தெரிவு செய்யப்பட்ட 123 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் இவ்வாறு தற்காலிகமாகத் தங்கியுள்ள ஆயிரத்து 193 பேரின் தகவல்களும் சேகரிக்கப்பட்டு வருகின்றன. (வ-இ)

---

# நீர்வீழ்ச்சியில் தவறிவீழ்ந்து வெளிநாட்டவர் உயிரிழப்பு

பதுளை, மார்ச் 1

பதுளை, எல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கித்தல் எல்ல நீர்வீழ்ச்சியில் நேற்றுமுன்தினம் தவறிவீழ்ந்து வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த 33 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# ...தீச்சர ஆலய
# ...ரி சிறப்பிதழ் 01.03.2022

## ...ச்சர ஆலய வரலாறு

...கரைப் பகுதியிலுள்ள ஒரு சிவன் கோயிலாகும். தேவாரப் பாடல் பெற்ற தலங்களில் ஈழ

...வரர் அம்மனின்

...தியிலுள்ள ஒரு சிவன் கோயிலாகும். இது மன்னார் மாவட்டத்திலுள்ள சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ...ல் பெற்ற இரண்டு இலங்கைத் தலங்களில் இதுவும் ஒன்றாகும். திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும், ...ற்ற தலங்களில் ஈழ நாட்டுத் தலங்களில் ஒன்றாகும்.

...ஈர்" இக்கோயில் மாதோட்டம் நகரில் அமைந்துள்ளது. சூரபதுமனின் மனையாளின் பேரனார் துவட்டா ...கேதீச்சரத்தானை வழிபட்டமையால் திருவருள் கைகூடிப் பிள்ளைப் பேறு பெற்றார். பின் இத்தலத்தில் ...யால் துவட்டாவெனவும் காலப் போக்கில் பெருநகரமாய் திகழ்ந்தமையால் மாதுவட்டாவெனவும் ...வோர்க்கு புண்ணியம் கிட்டுமெனவும், இத்தீர்த்ததில் நீராடுவோர்க்குப் பிரமகத்தி போன்ற பாவங்கள்

...ருக்கோயிலிற்கு நாகநாதர் எனவும் பெயர் வழங்கி வந்துள்ளது. சோழ. பாண்டிய மன்னர்கள் பல ...கள் நித்திய நைமித்தியங்கள் இடையறாது செய்த பெருமையுங் கொண்ட திருத்தலம் இதுவாகும். கிபி ...ந்தர மூர்த்தி நாயனாராலும் போற்றிப் புகழ்ந்து திருப்பதிகம் பாடப் பெற்ற சிறப்புடைய தலமிதுவாகும். ...மானின் பெரியபுராணத்திலும் இத்திருத்தலம் சுட்டப்பட்டிருக்கிறது.

...வுத் தரவுகள் மூலமறிய முடிகின்றது. அன்றியும் இத்திருவிடம் உலகப் புகழ்பெற்ற பெருநகரமாகவும் ...த ஆற்றல் மிக்க கலைஞர்களைக் கொண்டு திகழ்ந்த அழகு நகரமாகவும் மிளிர்ந்ததாக ஆய்வாளர்கள் ...ங்காலை என்னும் நகரமிருந்தமையும், பண்டங்கள் ஏற்றியிறக்கும் துறைமுகமாகவும வங்கமெனும் ... பாப்பாமோட்டையென்றும் இன்றும் அழைக்கப்படும் ஊர்கள் இருப்பதையும் காணலாம். அந்தணர்கள் ...தமையால் மாளிகைத் திடலெனவும் அமைந்திருந்தன

...து கொண்டுவரப்பட்ட புத்த தந்தத்துடன் மாதோட்டத்தின் கண்ணிறங்கி அன்று இரவினை அங்கேயே


வாடிக்கையாளர் அனைவருக்கும்
சிவன் அருள் பெருகிட பிரார்த்திக்கின்றோம்



திருமணப் பட்டுப் புடைவைகளையும் மங்கலகர நிகழ்வுகளுக்கான சகல வகையான ஆடைகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

SANGREY FASHION
சங்றெ பெஷன்

077 487 6656
KKS Road, Mallakam Junction
sangeetharegi1566@gmail.com

...ல் சிவனருள் பெருகிட பிரார்த்திப்போம்
...கடல் வாணியம்
...சிக்குடா சந்தி, முழங்காவில்
...பிடி உபகரணங்களையும் மற்றும் வெளி... ...ாகங்களையும் பெற்றுக்கொள்ள முடியும்.
...10, 07 522 7833

மஹா சிவராத்திரியில் சிவனருள் பெருகிட பிரார்த்திப்போம்
ஸ்ரீ சிவாஞ்சனா ஜுவல்லறி
இல. 149A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 9227, 077 711 0220

திருக்கேதீச்சரத்தானின் திருவருள் இந்நாளில் அகிலமெல்லாம் நிரம்பிட பிரார்த்திப்போம்



Since 1978

நடராசா கஜந்தன்
நியூமைதிலி ஜுவலர்ஸ்
ஸ்தாபனத்தின் மற்றுமொரு கிளை ஸ்தாபனமாக
நடராசா கஜந்தன்
சந்தோஷ் ஜுவல்லர்ஸ்
Santhosh jewellers



Since 1978



காலத்தை வெல்லும் கலை நுட்பத்துடன்
மின்னும் பொன் நகையால் மேலும்
உங்கள் புன்னகை ஒளிரும் விரையுங்கள்
நியூ மைதிலி மற்றும் சந்தோஷ் ற்கு

ஒரிஜினல் தங்க நகைகளை பெற்றுக்கொள்ள
நீங்கள் நாடவேண்டிய இடம்

இல.97A, 99V, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம் என்ற முகவரியில்
இயங்கிக் கொண்டிருக்கின்றது
என்பதனையும் வாடிக்கையாளர்களுக்கு
அறியத் தருகின்றோம்.


இல. 38, 40, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Tel : 021 221 7878 Fax : 021 221 8777
newmaithily40@gmail.com
newmaithily Jewellers 0094 21 221 7878

இல. 97A, 99V மின்சார நிலைய வீதி. யாழ்ப்பாணம்
Tel : 021 221 1177
santhoshjewellers1188@gmail.com
santhoshjewellers 021 221 1188


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

அன்னை மடியில்
28 • 07 • 1935





இறைவன் அடியில்
26 • 02 • 2022



## திரு. நாகலிங்கம் துரைசிங்கம்

(இளைப்பாறிய யாழ். மாநகரசபை வேலை - மேற்பார்வையாளர்)

யாழ். நல்லூரைப் பிறப்பிடமாகவும், கனடா Toronto வை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் துரைசிங்கம் கடந்த (26.02.2022) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அப்பாக்குட்டி - அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், ஊர்காவற்துறை புளியங்கூடலைச் சேர்ந்த காலஞ்சென்ற இராசமணி அவர்களின் ஆருயிர்க் கணவரும், ரவீந்திரன், விமலேந்திரன், குணேந்திரன், யோகேந்திரன், மஞ்சுளா ஆகியோரின் பாசமிகு தந்தையும், மாலதி, சுமதி, யமுனா, றஜனி, இராசகுமாரசாமி (அப்பன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி, நவமணி, குமாரசாமி, பொன்னுச்சாமி, பூமணி மற்றும் மனோன்மணி, ராஜலச்சுமி (தஞ்சி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான வாலாம்பிகை, சின்னத்துரை, பத்மாவதி, குலசிங்கம், கருணாகரன், செல்லம்மா, முத்துத்தம்பி, சுந்தரம், சதாசிவம், வீரசிங்கம், சிந்தாமணி மற்றும் சிவஞானவதி, ஜெயசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், அன்னலச்சுமி அவர்களின் உடன் பிறவாச் சகோதரரும், றோஜர், யூலியன், டெல்பின், நிரூபன், மிதிலன், நவீன், பிரவீன், சேயோன், ரியானா, நிலானி, யாமினி, நிதிலா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**நிகழ்வுகள்**

**பார்வைக்கு**

- Monday, 28 Feb 2022 6:00 PM - 9:00 PM
- Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

கிரியை

- Tuesday, 01 Mar 2022 9:00 AM - 11:00 AM
- Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

தகனம்

- Tuesday,01 Mar 2022 11:30 AM
- Highland Hills Crematorium 12492 Woodbine Avenue, Gormley, Ontario, L0H 1G0, Canada

தொடர்புகளுக்கு:

வீடு – குடும்பத்தினர்
Mobile : +14165519573

ரவி – மகன்
Mobile : +16472977030

விமல் - மகன்
Mobile : +16478586707

குணா – மகன்
Mobile : +19169903420

யோகா – மகன்
Mobile : +16474040851

[illegible] – மகள்
Mobile : +16472053731

தகவல்:
குடும்பத்தினர்

(cs.43224) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
## சந்தைகள், இறைச்சிக்கடைகளினை குத்தகைக்கு வழங்குவதற்கான பகிரங்க ஏலக்கேள்வி அறிவித்தல் - 2022

சபையினால் கீழ்க்குறிப்பிடப்படும் சந்தைகளினை 2022 ஆம் ஆண்டின் (14.03.2022 - 31.12.2022) வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான பகிரங்க ஏலக்கேள்விகள் கோரப்படுகின்றன.

ஏலம் நடைபெறும் திகதி : 2022.03.09 (புதன்கிழமை) முற்பகல் 11.00 மணி.
இடம் : வலிகாமம் கிழக்கு பிரதேச சபை தலைமை அலுவலக முன்றல், புத்தூர்

| தொ. இல | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவ கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த தொகை (VAT,NBT நீங்கலாக) | மாதாந்த வாடகை |
|---|---|---|---|---|---|
| | **அச்சுவேலி உப அலுவலகம்** | | | | |
| 01 | அச்சுவேலி பொதுச்சந்தையும் துவிச்சக்கரவண்டி தரிப்பிடமும் அச்சுவேலி பஸ் நிலைய வாகன தரிப்பிடமும் | 250.00 | 25,000.00 | 6,405,467.27 | |
| 02 | அக்கரை கடற்கரை – வாகன தரிப்பிடமும் சிற்றுண்டிச்சாலை மற்றும் சிறுவர் மகிழ்விடம் | 250.00 | 2000.00 | 44,104.50 | 500.00 |
| 03 | வளலாய் தம்பாலை பொதுச்சந்தை | 250.00 | 2000.00 | 182,464.59 | |
| 04 | வளலாய் கோழியிறைச்சிக்கடை | 250.00 | 2000.00 | 188,253.20 | 250.00 |
| | **புத்தூர் உப அலுவலகம்** | 250.00 | | | |
| 01 | புத்தூர் பொதுச்சந்தை | 250.00 | 2000.00 | 224,079.32 | |
| 02 | நிலாவரை திறந்த வெளிச்சந்தையும் வாகன தரிப்பிடமும் | 250.00 | 2000.00 | 460,805.37 | |
| | **கோப்பாய் உப அலுவலகம்** | 250.00 | | | |
| 01 | கோப்பாய் ஆட்டிறைச்சிக்கடை | 250.00 | 3000.00 | 403,342.77 | 2250.00 |
| | **உரும்பிராய் உப அலுவலகம்** | 250.00 | | | |
| 01 | உரும்பிராய் ஆட்டிறைச்சிக்கடை | 250.00 | 3000.00 | 446,290.41 | 2250.00 |
| 02 | உரும்பிராய் கோழியிறைச்சிகடை | 250.00 | 3000.00 | 314,422.40 | 2250.00 |

ஏலத்தில் பங்கு கொள்பவர்கள் கேள்விப்படிவக்கட்டணம் ரூபா 250.00 இனை செலுத்துதல் வேண்டும். **ஏலக்கேள்வியில் தெரிவுசெய்யப்படும் ஏலதாரர்கள் உடனடியாக மீளளிக் கக்கூடிய வைப்புத்தொகையினை சபைக்கு செலுத்துதல் வேண்டும்.**

ஏலத்தில் பங்குபெற விரும்புபவர்கள் அவர்களது அடையாள அட்டையினை கொண்டு வருவதுடன் அதன் நிழற்படப்பிரதியையும் கிராம சேவையாளரால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழ் அல்லது உரிய பெயரிலுள்ள மின்சாரப்பட்டியல் பிரதி அல்லது வங்கிக் கணக்குப் புத்தகத்தின் பிரதி ஏதாவதொன்று சமர்ப்பித்தல் வேண்டும்.

சித்தியடையும் கேள்விதாரர் கோரிய கேள்வித்தொகையினது 1/3 பங்கு தவணைக்கட்டணத் தினை 2022.03.11 ஆம் திகதி மதியம் 02.00 மணிக்கு முன்பாக சபையின் உப அலுவ லகத்தில் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ளல் வேண்டும்.

**தியாகராஜா நிரோசுஷ்**
**தவிசாளர்**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.**
**2022.03.01**

(cr.37160) (2:6)

**தனியார்...**

கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார். தனியார் பஸ்களுக்கான எரிபொருளை இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான டிப்போக்களில் இருந்து விநியோகிக்கு மாறு அனைத்து டிப்போ முகாமையாளர்களுக்கும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். (அ-ஒ-இ)

## வேலையாள் தேவை

யாழ்ப்பாணம், நல்லூரில் அமைந்துள்ள வீடு ஒன்றிலுள்ள பெண் நோயாளி ஒருவரை பராமரிப்பதற்கு வீட்டில் தங்கி நின்று வேலை செய்யக்கூடிய பெண் ஒருவர் தேவை.
**சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.**

(CS 18630) (3/6)

**077 913 4540**

## வேலையாட்கள் தேவை

சண்டிலிப்பாயில் உள்ள Hotel ஒன்றிற்கு ரொட்டி மாஸ்ரர் மற்றும் வேலையாட்கள் தேவை. (CS 18628) (3/6)

**076 965 2003 / 077 552 9904**

## டிவா தையல் பயிற்சி நிலையம்

தையல் பயிற்சிகள் ஆரம்பம். அடிப்படை தையல்கள், சாறி பிளவுஸ்கள், பாவாடைகள், பஞ்சாபிகள், சோட்டிகள் **மிக விரையில் ஆரம்பிக்கபடவுள்ளன.**

NVQ Level **சான்றிதழ் வழங்கப்படும்.**

தொடர்பு:- 077 714 1559 (CS 18631) (4/6) **359/8 கோயில் வீதி, நல்லூர்**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**சுகிர்தநாயகம் சுரேந்திரன்**
(பாதுகாப்பு உத்தியோகத்தர் - Certiz Lanka)
**திதி: 01.03.2022**

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்..!
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்..!


உங்களது ஆத்மா சாந்தியடைய கடவுளை பிரார்த்திக்கின்றோம்.

(CS 18634 (4/6)

சந்தையடி முன் ஒழுங்கை, மானிப்பாய்.

உங்கள் பிரிவால் வாடும். -குடும்பத்தினர்-

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 22.07.1936
மறைவு 30.01.2022

## சுப்பிரமணியம் பழநிவேற்பிள்ளை

(ஓய்வு பெற்ற கணக்காளர்)

வேலணை வங்களாவடியைப் பிறப்பிடமாகவும் சரவணை மேற்கு மற்றும் பிரான்சினை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பழநிவேற்பிள்ளை கடந்த (30.01.2022) ஞாயிற்றுக்கிழமை பிரான்சில் சிவபதமடைந்த செய்தி கேட்டு எம்முடன் துயர்பகிர நேரில் கலந்து கொண்ட உற்றார், உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள் மற்றும் தொலைபேசியூடாகவும் முகநூல், மின்னஞ்சல் மூலமாகவும், எமக்கு ஆறுதல் கூறியவர்களிற்கும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர்வளையம், மலர்மாலை சாத்தியவர்களுக்கும் இன்று வரை எம்முடன் நின்று எமக்கு சகல உதவிகளையும் செய்த அன்பு நெஞ்சங்களிற்கும் எமது குடும்பம் சார்பாக மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக்கொண்டு எமது குடும்பத் தலைவரின் சகோதரர் இல்லமான இல. 67, Chapel Lane யாழ்ப்பாணம் எனும் முகவரியில் இன்று (01.03.2022) செவ்வாய்க்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதன் பின் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அனைத்து நல் உள்ளங்களையும் அன்புடன் வரவேற்கின்றோம்.

(CS 18629) (3.6)

**இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

இல. 67, சப்பல் வீதி, யாழ்ப்பாணம்.
அச்சுதன் (மகன்)
+ 33 665 014461

குடும்பத்தினர் மற்றும் சகோதரர்கள்
077 821 1752, 077 514 3866, 077 050 7840, 077 466 6031

## மரண அறிவித்தல்



## கந்தையா நாகம்மா

காரைநகரைப் பிறப்பிடமாகவும் தலையாழி கிழக்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நாகம்மா நேற்று (28.02.2022) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் பார்வதி தம்பதியரின் அன்பு மகளும், விஸ்வநாதர் கந்தையாவின் பாசமிகு மனைவியும், தேவதாஸ், மோகனாம்பாள், சிவயோகேஸ்வரி, சரோஜாதேவி, முருகதாஸ், காலஞ்சென்ற கிருஷ்ணதாஸ் மற்றும் கயனதாஸ் ஆகியோரின் அன்புத்தாயாரும், கந்தசாமி, காத்தியேசு, பரமசாமி, நாகேஸ்வரி, வேலுப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும், சரோஜினிதேவி, கனகரத்தினம், அருணகிரிநாதன் (ஆனந்தன்), சிவரஞ்ஜிதன், தேவகுஞ்சரி, கவிதா ஆகியோரின் மாமியாரும், அமலா, ரிஷோ, நுரியன், டிவாஷன், தர்ஷன், தனுஷா, துளசிகா, சிவசந்துரு, சங்கவி, ராகவன், அச்சு, அஸ்விதா, பத்மேஸ் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அச்சுக்கூட ஒழுங்கை, தலையாழி கிழக்கு, கொக்குவில்.** (CS 18633) (4/6)

**தகவல்: குடும்பத்தினர்** (V.S கந்தையா)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### எண்ணெய்க்....

அவரது அமைச்சில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போதைய சந்தர்ப்பத்திலும், கடலில் எண்ணெய்க் கப்பல்கள் காத்துக்கொண்டிருக்கின்றன. எனினும், டொலர் இல்லை. தொடர்ச்சியாக கப்பல்களுக்கு, உரிய நேரத்தில் பணத்தை வழங்கி விடுவிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளமையால், இருப்பிலுள்ள எரிபொருள் தொகையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. எனவே, அடுத்த கப்பல் வரும் வரையில், மட்டுப்படுத்த அளவு எண்ணெயை சந்தைக்கு விடுவிக்க வேண்டியுள்ளது.

எண்ணெயைக் கொண்டுவர பணம் இருக்க வேண்டும். டொலரை தொடர்ச்சியாக வழங்க, கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற விசேட அமைச்சரவைக் கூட்டத்தில் நிதி அமைச்சு உறுதியளித்தது. எனினும், அது தற்போதுவரையில் நடைமுறையாகவில்லை. அதேநேரம், எரிபொருள் விலையை அதிகரிக்க தற்போது வரையில் எந்தவிதத் தீர்மானம் மேற்கொள்ளப்படவில்லை-என்றார்.

(அ-ஒ-இ)

### திரிபோசாவும்...

திரிபோசா இல்லை என்று குடும்ப சுகாதார சேவைகள் பணியகத்தின் பணிப்பாளர் மருத்துவர் சித்ரமாலி டி சில்வா தெரிவித்துள்ளார். கிளினிக்குகளுக்கு வரும் கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்கு திரிபோசா வழங்கப்படாது என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-ஒ-இ)

### பாப்பரசரை...

பிரான்சிஸை நேற்றுச் சந்தித்துப் பேசியுள்ளார். இந்தச் சந்திப்பு வத்திக்கான் நகரின் புனித பீற்றர் சதுக்கத்தில் மு.ப. 11.00 மணிக்கு நடைபெற்றுள்ளது.

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதல் தொடர்பில் முன்னெடுக்கப்பட்டுவரும் விசாரணைகள் குறித்து பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை சர்வதேசத்தை நாடவுள்ளதாகத் தொடர்ச்சியாகத் தெரிவித்துவருவதன் பின்னணியில் இந்தச் சந்திப்பு நடைபெற்றுள்ளது. (ஒ-இ)

### கிளிநொச்சியில்...

நொச்சியில் பணியாற்றும் 48 வயதான நவநீதன் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் 27ஆம் திகதி அந்தப் பகுதியில் விபத்தை ஏற்படுத்திவிட்டு, சந்தேகநபர் தப்பிச் சென்றுள்ளதாகப் பொலிஸார் கூறுகின்றனர். விபத்தால் பழுதடைந்த வாகனத்தை வவுனியாவில் திருத்துவதற்கு சந்தேகநபர் கொண்டு சென்றுள்ளார். பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைவாக வவுனியாவில் உள்ள திருத்துமிடத்தில் வைத்து சந்தேகநபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

(அ-ஒ-10-113)

## 23 ஆவது அகவை நினைவுகளும் 6 ஆம் மாத நினைவலைகளும்



**செல்வி சி.டினோஷிகா**
(டினோஷிக் குட்டி)

| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 01.03.1999 | 13.09.2021 |

எமது அருமை டினோஷிக்குட்டியை அகவை 23 இல் நினைவு கூருகின்றோம்.
உமது ஒவ்வொரு பிறந்த நாளையும் குதூகலித்துக்கொண்டாடினோம்.
ஆனால் இன்று இக்குதூகலம் இல்லையே அம்மா!
குட்டி நீர் அப்பா அம்மாவுக்கு நல்ல துணையாக உமது சகோதரர்களுக்கு பாசமுள்ள நல்ல அக்காவாக இருப்பீர் என்றல்லோ நினைத்திருந்தோம். ஆனால் பாவிகள் நாம் உம்மை இழந்து தவிக்கின்றோம். இன்று குதூகலமாய் உம் பிறந்த நாளைக் கொண்டாட முடியாத பாவிகளாக உமது பிரிவைத் தாங்க முடியாமல் தவிக்கின்றோம். அன்பு மகளே எத்தனை சீர், சிறப்பு இருந்தாலும் நீர் இல்லாத வாழ்வு எமக்கு கசப்பானது தானம்மா. எவ்வளவோ எழுத நினைக்கின்றேன் ஆனால் என்னால் எழுத முடியவில்லை. கண்ணீரோடு உமை வாழ்த்தி உமது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

சங்குவேலி வடக்கு,
மானிப்பாய்.
077 222 4186

(cs. 18506) (2/6)

நினைவுகளுடன்
குடும்பத்தினர்



**நாவற்குழி திருவாசக அரண்மனை**
**சிவதெட்சணாமூர்த்தி திருக்கோயில்**
**மகா சிவராத்திரி விழா**
**காலம் : இன்று (01.03.2022) செவ்வாய்க்கிழமை**


**மஹா சிவராத்திரி இன்று (01.03.2022) ஆலயத்தில் விசேட பூசைகள், 108 சிவலிங்கங்களுக்கும் பக்தர்கள் அபிஷேகம் செய்யும் நிகழ்வும் நடைபெறும்.**

(காலை 5.30 மணி தொடக்கம் நள்ளிரவு 12.00 மணி வரை அபிஷேகம் செய்யலாம்)

**சிவபூமி திருவாசக அரண்மனை 021 221 4330**

## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 10.04.1943 | 28.02.2022 |



## பொன்னுத்துரை கிருஷ்ணபிள்ளை

உடுவில் சோமராம் தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை கிருஷ்ணபிள்ளை நேற்று (28.02.2022) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், கனகாம்பிகையின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற துரைசிங்கம் மற்றும் ஜீவரெட்ணம் காலஞ்சென்ற கனகம்மா மற்றும் மகேந்திரன் (கனடா) ஆகியோரின் சகோதரனும்,சிறீவேணி, காலஞ்சென்ற கிரிதரன் மற்றும் கிருஷ்ணகல்யாணி (சுவிஸ்), விருஷ்னி, தருஷ்னி (பிரான்ஸ்), சுதாகரன் ஆகியோரின் அன்புத்தந்தையும், சுகுமாரன், திருமாவழகன், சிவகுமார், மகேந்திரன், ஜானகி ஆகியோரின் மாமனாரும், கிரிசாந், சாய்ஹர்னி, விஜய், விஷ்ணு, விஷ்மன், கஜிபன், சிறிஷ்ரினா, சுசானா, அம்புஜன் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.03.2022) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்

(CS 18638) (4/6)

## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 27.02.1952 | 27.02.2022 |



## திரு. சரவணமுத்து சிறீஸ்கந்தராஜா
(Electrician)

இல.748, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் இல.123, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து சிறீஸ்கந்தராஜா அவர்கள் நேற்று (27.02.2022) ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து கனகம்மா ஆகியோரின் அன்பான சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான பிலிப் யோசப் (றோஸ் ஆட்ஸ் ஸ்ரூடியோ) நல்லம்மா ஆகியோரின் பாசமிகு மருமகனும், ஜெயசிந்தா (சோதி, ஓய்வு பெற்ற ஆசிரியை, யாழ்.திருக்குடும்ப கன்னியர் மடம்) அவர்களின் அன்புமிகுந்த கணவரும், சகிலா (பிரான்ஸ்), சரண்யா (Nirushana Building Constructions (pvt) ltd), சௌமியா (ஆசிரியை, கிளி.இரணைதீவு றோ.க.த.க பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், சசிகரன் (பிரான்ஸ்), பிரசன்னா (மருத்துவ பிரதிநிதி) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி, மலர், சக்திகுமார் மற்றும் ராணி, ஆனந்தவடிவேல் (ஓய்வு நிலை சிரேஷ்ட முகாமையாளர், மக்கள் வங்கி), பேபி சரோஜா (கனடா), தேவி (ஜேர்மனி), உதயகுமார் (பிரான்ஸ்), விக்னேஸ்வரி (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்றவர்களான ஜெயசீலி, ஜெயராணி, தேவி, விக்ரர் மற்றும் ஜெயவதி, அன்ரன், அருட்சகோதரி லூசியா (திருச்சிலுவைக் கன்னியர் சபை), ஜெயக்குமார், ஜெயமலர், பிலிப் துரைராஜா, மரியதாஸ் அலோசியஸ், காஞ்சனா, ஞானேந்திரா, இராஜலிங்கம், ஜேன், ஜெயாகாந்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும், பிரியங்கா (பிரான்ஸ்), ஆதுரி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குடும்பத்தினர்

வடிவேல் (சகோதரன்):- 077 153 9158
மனைவி:- 077 240 9709
சரண்யா (மகள்):- 077 393 2680
சௌமியா (மகள்):- 077 579 0751

123, புகையிரத நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(CS 18638) (4/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### முன்னாள் இராணுவத்தளபதி பொன்சேகா

# உண்மைகளைச் சொன்னால் பிரச்சினைகளைத் தீர்க்கலாம்

கொழும்பு, மார்ச் 1

இலங்கையின் பொறுப்புக்கூறல் மற்றும் போர்க் குற்றங்கள் குறித்த விசாரணைகளில் பிரதான சாட்சிக்காரராக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா முன்வந்து உண்மைகளைக் கூறினால் பிரச்சினைகளை இலகுவாகத் தீர்க்கமுடியும் என்று சிவில் செயற்பாட்டாளரும், அனைத்து வகையான பாகுபாடு மற்றும் இனவெறிக்கு எதிரான சர்வதேச அமைப்பின் இலங்கைக்கான தலைவருமான நிமல்கா பெர்னாண்டோ தெரிவித்தார்.

சரத் பொன்சேகா போரை நடத்திய அப்போதைய தளபதி என்பது மட்டுமல்ல அவர் நடுநிலையாக சில விடயங்களை கூறிக்கொண்டுள்ளார். இராணுவ த்தளபதி என்ற ரீதியில் தனது இராணுவத்தை காப்பாற்ற வேண்டும் என்பதில் அவர் உறுதியாக உள்ளார், அதனை பிழையெனக் கூறிவிட முடியாது.

அதேபோல் தனிப்பட்ட தவறுகள் இடம் பெற்றிருக்க வேண்டும், அதற்கான விசாரணைகளை நடத்தி, உரிய நபர்களை தண்டிக்க வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

தனிப்பட்ட குற்றங்கள் இடம்பெற்றுள்ளதாக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா கூறுவதே மிகமுக்கிய வாக்குமூலமாகக் கருதவேண்டும். ஆகவே சரத் பொன்சேகா உண்மைகளைத் தெரிவிக்க வேண்டும் என்றும் அவர் கூறினார். (அ-ஒ-இ)

# ஈஸ்டர்தினத் தாக்குதலுடன் சத்தியமாகத் தொடர்பில்லை

### முன்னாள் ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 1

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் எந்தக் குற்றமும் இழைக்கவில்லை என்பதை எந்தவொரு தேவாலயத்தின் சிலுவையின் மீதும் சத்தியம் செய்து நிரூபிக்கத் தயார் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பொலநறுவையில் உள்ள தேவாலய ஆராதனையொன்றில் நேற்றுமுன்தினம் பங்கேற்றபோது அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஈஸ்டர் தாக்குதல் பற்றி அறிந்து கொண்டதால் நான் வெளிநாடு சென்றதாக சிலர் பரப்புரை செய்கின்றார்கள். புலனாய்வுப் பிரிவினரோ அல்லது வேறு தரப்பினரோ தகவல் வழங்கியிருந்தால் நான் எனது பயணத்தை நிறுத்தியிருப்பேன். நான் மருத்துவ சிகிச்சைக்காக சிங்கப்பூர் சென்றிருந்தேன். சில ஊடகங்களில் தாக்குதல் பற்றி தொலைபேசி மூலம் எனக்கு அறிவிக்கப்பட்டது எனச் செய்தி வெளியிடுகின்றன. எனினும் சிங்கப்பூர் மருத்துவமனைகளில் நோயாளர்கள் தொலைபேசிகளைக் கொண்டு செல்ல அனுமதியில்லை. பௌத்தர் என்ற ரீதியில் புத்தரின் பாதங்களைத் தொழுது இந்த சம்பவம் பற்றிய தகவல்கள் கிடைக்கவில்லை என்பதை உறுதிபடக்கூற முடியும் - என்றார். (ஒ-வ-இ)

# நாளை விடுமுறை வழங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 1

மகா சிவராத்திரியை முன்னிட்டு விரதமிருக்கும் வர்த்தக நிலையப் பணியாளர்களின் நலன் கருதி நாளை புதன்கிழமை அவர்களுக்கு விடுமுறை வழங்கி உதவுமாறு யாழ்.வணிகர் கழகம் கோரிக்கை விடுத்துள்ளது. (ஒ-ரி1)

### பஸிலுக்கு...

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

வழக்கை தொடர்ந்து முன்கொண்டு செல்ல முடியாது என சட்டமா அதிபர் திணைக்களத்தால் மன்றுக்கு அறிவிக்கப்பட்டமைக்கு அமைய, பிரதிவாதியாக பெயர் குறிப்பிடப்பட்ட நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச வழக்கிலிருந்து விடுவித்து விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

திவிநெகும திணைக்களத்தின் நிதியை முறையற்ற வகையில் கையாண்டமை தொடர்பிலேயே நிதி அமைச்சர் பஸில் ராஜபக்சவுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. (ஒ-இ)

### டீசலுக்கு...

மண்ணெண்ணெய் விநியோகம் தடைப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

'வடக்குக்கான டீசல் மற்றும் மண்ணெண்ணெய் பவுஸர்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே தற்போது வருகின்றன. நாடுமுழுவதும் இவ்வாறு மட்டுப்படுத்தப்பட்ட விநியோகமே நடைபெறுகின்றது. ஆனாலும் நாடு முழுவதிலும் ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டு நிலைமையால் அதிகளவானோர் டீசல் மற்றும் மண்ணெண்ணெய் என்பவற்றைக் கொள்வனவு செய்வதால், தட்டுப்பாடு ஏற்படுகின்றது' என்று வடக்கு பெற்றோலியக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-ஒ-5-17)

### நிரந்தர...

சுட்டிக்காட்ட விரும்புகிறோம். இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வைக் கொண்டு வருவதற்கும், அதன்மூலம் தமிழ் மக்களுக்கு எதிரான அட்டூழியங்களை நிறுத்துவதற்கும் சர்வதேச அளவில் நடத்தப்பட்டு கண்காணிக்கப்படும் பொதுமக்கள் வாக்கெடுப்பு ஒன்றே ஒரே வழி என்பதை நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

தமிழ் மக்களுக்கு எதிரான வன்கொடுமை குற்றங்களை தடுப்பதற்கு பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வலுவாக பரிசீலிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். இவ்வாறு 5 தமிழ்க் கட்சிகள் கூட்டாக இணைந்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு கடந்த 25 [illegible] வைத்துள்ள [illegible] துள்ளன.

இந்தக் கடிதத்தில், பொறுப்புக்கூறலுக்கான நடவடிக்கை இன்மை, இராணுவத்தினர் மீது விதிக்கப்பட்ட தண்டனைகளிலிருந்து பொதுமன்னிப்பில் விடுதலை, இனப்பரம்பலை மாற்றியமைக்கும் நடவடிக்கை, பயங்கரவாத தடைச் சட்டம் மற்றும் கொரோனா பாதுகாப்பு என்ற பெயரில் அமைதியான போராட்டங்களை கட்டுப்படுத்தல், காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடுபவர்கள் அச்சுறுத்தப்படுதல், பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படாமை தொடர்பிலும் குறிப்பிட்டுள்ளன.

தமிழ்மக்கள் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன், ரெலோவின் தலைவர், அ.அடைக்கலநாதன், புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் க. பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ந.சிறீகாந்தா ஆகியோர் இந்தக் கடிதத்தில் ஒப்பமிட்டுள்ளனர். (அ-ஒ-5)

### உக்ரைன் - ...

(இலங்கை நேரம்) பெலராஸில் ஆரம்பமாகியது. இதனால் ரஷ்யா தாக்குதலுக்கு அமைதி கொடுத்துள்ளது.

உக்ரைன் தரப்பில் பாதுகாப்பு அமைச்சர் ஒலக்ஸி ரெஸ்னிகோவ், வெளிவிவகார இணை அமைச்சர் அலக்ஸாண்டர் லுகாசென்கோ ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர். ரஷ்யத் தரப்பில் நாடாளுமன்றத்தின் சர்வதேச விவகாரக் குழுவின் தலைவர் லியோனட் ஸ்டல்ஸ்கி தலைமையிலான குழுவினர் பங்கேற்றுள்ளனர்.

உடனடியான போர்நிறுத்தம்தான் பேச்சுக்கான தங்கள் இலக்கு என்று உக்ரைன் உறுதிபடக் கூறியுள்ளது. இதுவரை நடந்துள்ள போரில் நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்துள்ளதால் போர் நிறுத்தமே தேவை என்றும் ரஷ்யப்படைகள் வெளியேற வேண்டும் என உக்ரைன் தரப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அதேசமயம் இருநாடுகளிடையே ஒப்பந்தம் செய்வது அவசியம் எனவும், அதற்கு உக்ரைன் ஒத்துழைக்க வேண்டும் எனவும் ரஷ்யா தரப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது. நேட்டோவில் உக்ரைன் இணையக் கூடாது, ஐரோப்பிய ஒன்றியத்தை காரணம் காட்டி, ரஷ்ய எல்லையில் ஐரோப்பிய ஒன்றியம் நெருங்கி வருவதை ஏற்க முடியாது எனவும், இதற்கு உக்ரைன் காரணமாக இருக்கக்கூடாது எனவும் ரஷ்யா உறுதியாகத் தெரிவித்துள்ளது.

அதுபோலவே ஐரோப்பிய ஒன்றியத்தில் தங்களை இணைக்க வேண்டும் என உக்ரைன் வலியுறுத்தியுள்ளதால் பேச்சு சுமுகமாக நடைபெறுமா? என்ற கேள்வியும் எழுந்துள்ளது. (அ-ஒ-இ)

### கடல்வளத்தை...

வலைகளைப் பயன்படுத்த முடியும் என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்றுத் தெரிவித்துள்ளதாக கடற்றொழில் அமைச்சின் ஊடகப் பிரிவுஅறிக்கையில்குறிப்பிடப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட கடற்றொழிலாளர்களின் பிரதிநிதிகளுக்கும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இடையிலான கலந்துரையாடலின் போதே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பாக மேலும் கருத்து தெரிவித்த கடற்றொழில் அமைச்சர்,

கடந்த ஆட்சியில் இழுவைமடி வலை தடைச் சட்டம் கொண்டு வரப்பட்டிருந்தது. கடற்றொழிலாளர்களின் எதிர்ப்புக் காரணமாக நாரா நிறுவனத்தால் அடையாளப்படுத்தப்பட்ட பகுதிகளில் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே, இழுவைமடி வலைத் தொழிலை முற்றாக தடைசெய்ய வேண்டும் என்ற கோரிக்கை தற்போது முன்வைக்கப்பட்டு வருகின்றது.

எமது கடல் வளத்தை பாதிக்காத வகையில் இழுவைமடி வலையைப் பயன்படுத்துவது தொடர்பாக பொருத்தமான சட்டத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதுவரையில் அடையாளப்படுத்தப்பட்ட பகுதிகளில் கடற்றொழிலாளர்கள் கடற்றொழில் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும் என்று தெரிவித்தார்.

அதேவேளை கருத்து தெரிவித்த கடற்றொழிலாளர் பிரதிநிதிகள், சுயலாப அரசியல் நலன்களுக்காக நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் போன்ற அரசியல்வாதிகள் தமது தொழில்முறைக்கு எதிரான கருத்துக்களை தெரிவித்து வருவதாகவும், விஞ்ஞான ரீதியாக நாரா நிறுவனத்தால் ஆய்வு செய்து அனுமதிக்கப்பட்ட பிரதேசங்களில் தொழில் செய்வதற்கு ஏற்றமுறையில் சட்டத் திருத்தங்களை மேற்கொண்டு தமது வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தி தரவேண்டும் என்ற கோரிக்கையை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் முன்வைத்தனர் - என்றும் கடற்றொழில் அமைச்சரின் ஊடகப் பிரிவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-5)

### சிவராத்திரி...

பலம், ஒட்டுமொத்த சமூகமும் எதிர்கொண்டுவரும் சவால்களை வெல்வதற்குக் கிடைக்கும் ஆசீர்வாதமாகவே நாம் பார்க்கிறோம். சிவனுக்கு உகந்த நன்னாள் எடுத்துரைக்கும் நம்பிக்கை, உலகவாழ் மக்கள் அனைவரும் புத்தெழுச்சி பெறுவதற்கான உற்சாகத்தை ஏற்படுத்துவதோடு, உண்மைத்தன்மை, தியாக மனப்பான்மை மற்றும் மன்னிப்பு வழங்கல் போன்ற உண்மைக் குணங்களுடன் வாழ்வதற்கான வழியமைக்கப்படுகிறது.

மகா சிவராத்திரி தின ஆன்மீகச் செய்தியானது, ஒவ்வொருவரிடையேயான ஒற்றுமையை மேலும் பலப்படுத்தும். ஆன்மீகச் சிந்தனை, உத்வேகம் மற்றும் வீரத்தைக் குறிக்கும் சிவனிரவு, அனைவரதும் நோக்கங்களை அடைய வழிவகுக்கும் நன்னாளாக அமைய பிரார்த்திக்கிறேன்' என்று ஜனாதிபதி கோத்தாபய தனது செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

'செழிப்பானதொரு வாழ்க்கைப் பயணத்துக்கு ஆன்மீக உணர்வு அடிப்படையான ஒன்று. இன்றைய தினத்தில் அனைவரும் ஒருமித்த ஆன்மீக உணர்வோடு வழிபாடு செய்வதன் ஊடாக பல நன்மைகள் கைகூடும் என்பது இந்து மக்களின் நம்பிக்கையாகும். பல்வேறு இனத்தவர்களும் - மதத்தவர்களும் இணைந்து பணியாற்றுவதன்மூலம், உங்களுக்கும் நாட்டுக்கும் சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவதற்கான வாய்ப்பு கிட்டும். இலங்கைத் தாயின் மக்கள் அனைவருக்கும் ஆரோக்கியமானதும் சுபீட்சம் மிக்கதும் அபிலாஷைகள் எல்லாம் கைகூடும் ஒரு எதிர்காலம் அமைய இந்த சிவராத்திரி தினம் மிகவும் முக்கியமானது என்பது எனது நம்பிக்கை. துன்பங்கள் என்ற இருள் நீங்கி, இன்ப ஒளி எங்கும் பரவ வேண்டித் துதிக்கும் பக்தி மிகுந்த இந்த நாளிலே அனைவருக்கும் சௌபாக்கியமே கிடைக்க இறையருளை மனதார வேண்டித் துதிப்போம். இந்த உன்னதமான மகாசிவராத்திரி தினத்தில் இலங்கை வாழ் இந்து மக்கள் அனைவருக்கும் நலமே விளையட்டும்! நாடு நலம் பெறட்டும்!' என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். (ஒ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். பல்கலையின்

# சம்பிரதாயப் பட்டமளிப்பு நாளைமறுதினம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 1

கொரோனாப் பேரிடர் காரணமாக நிகழ்நிலையில் பட்டம் வழங்கப்பட்டவர்களுக்கான சம்பிரதாயபூர்வ பட்டமளிப்பு விழா யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நாளை மறுதினம் 3ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறும் பட்டமளிப்பில், முதல் இரண்டு நாள்களும் தலா மூன்று அமர்வுகளும், மூன்றாம்நாள் இரண்டு அமர்வுகளுமாக இடம்பெறவுள்ளது. இந்தப் பட்டமளிப்பு விழாவில் 2 ஆயிரத்து 619 பேர் பட்டங்களைப் பெறுகின்றனர்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் நிகழ்வு யாழ். பல்கலைக்கழக சபா மண்டபத்தில் துணைவேந்தர் பேராசிரியர் சி. ஸ்ரீசற்குணராஜா தலைமையில் நேற்று இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் பல்கலைக்கழகப் பதிவாளர் வி. காண்டீபன், கல்வி மற்றும் ஆராய்ச்சி வெளியீடுகள் பிரிவின் உதவிப் பதிவாளர் எஸ். கே. பிரபாகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கலைப் பீடத்தின் பீடாதிபதியும், பட்டமளிப்பு விழாக் குழுவின் தலைவருமான பேராசிரியர் கே. சுதாகர் வழங்கிய ஊடக விவரிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

நாட்டில் தற்போது நிலவும் கொரோனாப் பெருந்தொற்றுச் சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு கடந்த 2021 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 7 ஆம் திகதி நிகழ்நிலையில் பட்டங்கள் வழங்கப்பட்ட பட்டதாரிகளுக்கு வேந்தர், சம்பிரதாயபூர்வமாக இந்தப் பட்டமளிப்பு விழாவில் பட்டங்களும், பட்டப்பின் தகைமைச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டமையை உறுதி செய்வார்.

பட்டமளிப்பு விழாவை யாழ். பல்கலைக்கழக வேந்தர், வாழ்நாள் பேராசிரியர் சி. பத்மநாதன் தலைமைதாங்கி, பட்டதாரிகளுக்கான பட்டங்களையும், பட்டப்பின் தகைமைச் சான்றிதழ்களையும், தங்கப் பதக்கங்களையும், புலமைப் பரிசில்களையும் வழங்கியமையை உறுதிசெய்து பட்டதாரிகளை கௌரவிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

உயர்பட்டப் படிப்புகள் பீடம், கலைப்பீடம், பொறியியல்பீடம், விஞ்ஞானபீடம், விவசாய பீடம், முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம், மருத்துவபீடம், தொழில்நுட்பபீடம், இணைந்த சுகாதார விஞ்ஞான பீடம் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் வவுனியா வளாகத்தை (தற்போதைய வவுனியாப் பல்கலைக்கழகத்தை) சேர்ந்த வியாபாரக் கற்கைகள் பீடம், பிரயோக விஞ்ஞான பீடம் ஆகியவற்றைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கும் இந்த பட்டமளிப்பு விழாவில் பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

இந்தப் பட்டமளிப்பு விழாவில் 238 பட்டப்பின் தகைமை பெற்றவர்களுக்கும், ஆயிரத்து 795 உள்வாரி மாணவர்களுக்கும், 585 தொலைக்கல்வி மாணவர்களுக்கும் பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

நாட்டில் எழுந்துள்ள கொரோனாப் பெருந் தொற்றுப் பரவல் அச்சம் காரணமாக, சுகாதாரத் துறையினரால் வழங்கப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகள் மற்றும் அறிவுறுத்தல்களுக்கமைய பட்டமளிப்பு நிகழ்வு ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது.

பட்டமளிப்பு விழாவுக்கு வழமை போன்று பட்டம் பெறும் மாணவர்களுடன், பெற்றோரும் கலந்துகொள்ளுமாறு அழைக்கப்பட்டுள்ளனர். பட்டம் பெறுகின்ற மாணவர்கள், மற்றும் அழைப்பின் பேரில் வருகை தர இருக்கின்றவர்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறு விநயமாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

விழா மண்டபம் மற்றும் ஒன்று கூடல் மையத்தில் பட்டதாரிகளும் அவர்களுடன் அழைக்கப்பட்ட பெற்றோர் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள். வீடியோ மற்றும் புகைப்படப்பிடிப்பாளர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

பட்டமளிப்பு நிகழ்வுகள் அனைத்தும் எமது பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் ஊடகப் பிரிவின் ஏற்பாட்டில் இணையத்தளம் வாயிலாகவும், முகப் புத்தகம், யூரியூப் சனல்களின் ஊடாகவும் நேரலையாக ஒளிபரப்புவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பட்டமளிப்பு விழா அரங்குக்கு வெளியிலும், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவதோடு, சமூக இடைவெளியைப் பேணுவதன் மூலம் இந்த நிகழ்வு வெற்றிகரமாக நிறைவுபெறுவதற்கு பல்கலைக்கழக சமூகம் அனைவரது ஒத்துழைப்பையும் வேண்டிநிற்கிறது. என்றுள்ளது.

இதேவேளை, மாணவர் நலன்கருதி பட்டம் செல்லுபடியாகும் காலத்தை முன்னிறுத்தி நிகழ்நிலையில் கடந்த ஆண்டு பட்டமளிப்பு விழா நடத்தப்பட்டிருந்தது. ஆனால், பெற்றோர் முன்னிலையில் சம்பிரதாய பட்டமளிப்பு விழா நடத்தப்படவேண்டும் என்று மாணவர்கள் தமது ஒன்றியம் ஊடாகவும், நேரடியாகவும் பல்கலைக்கழகத் துணைவேந்தரிடமும், பல்கலைக்கழக சமூகத்திடமும் கோரிக்கை முன்வைத்திருந்தனர். சம்பிரதாய பட்டமளிப்பு பின்னர் நடத்தப்படும் என்று துணைவேந்தர் அப்போது உறுதியளித்திருந்தார். அதற்கு அமைவாக சம்பிரதாய பட்டமளிப்பு நாளை மறுநாள் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-5)

# இந்திய மீனவர்கள் நேற்று விடுவிப்பு

கிளிநொச்சி, மார்ச் 1

கிளிநொச்சி இரணைதீவு கடற்பரப்பில் கடந்த 13ஆம் திகதி எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்ட 12 இந்திய மீனவர்களுக்கும் 7 வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட 6 மாத கால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு பிணையில் செல்ல கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம் நேற்றுக் கட்டளையிட்டுள்ளது.

இந்திய மீனவர்களைக் கைது செய்யும்போது அவர்களிடமிருந்த கைத்தொலைபேசிகள் மற்றும் ஒருவரிடம் இருந்து மீட்கப்பட்ட மலேசிய நாணயம் மற்றும் இந்திய நாணயங்கள் என்பன மீள ஒப்படைக்கப்பட்டன. ஆனால் படகுகள், வலைகள், மீன்பிடி உபகரணங்கள் என்பன அரசுடைமையாக்கப்பட்டுள்ளன. (ஒ,113)

## சிறுநீரகம் தேவை

O⁻ குறூப் வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை.

(CS 43270) (3/6)

077 797 0827 / 076 293 3205

## வீடு வாடகைக்கு உண்டு

கிளிநொச்சி நகரை அண்மித்த, மிகவும் சிறந்த சுற்றுச்சூழலில், பிரதேச செயலகத்திலிருந்து 500m தூரத்தில். 9 பரப்புக்காணியுடன் கூடிய 04 அறைகள் (ஒரு AC ROOM) அத்துடன் ATTACH BATHROOM,TOILET, வாகனத்தரிப்பிட வசதிகள் கொண்ட வீடும். அதன் பின்புறமாக ஒரு சிறிய அளவிலான வீடும் வாடகைக்கு உண்டு.

**குறிப்பு:- நாள் வாடகை எண்ணூறு (800.00) ரூபாயிலிருந்து உண்டு.**

**தொடர்புகளுக்கு:- 074 277 0299** (CR 7968) (4/6)

## NEW SCIENCE HALL

KANNATHIDDY JAFFNA

2022 A/L DAY CLASS

(2021 A/L பரீட்சைக்கு தோற்றியவர்கட்குரியது)

**திங்கள் தொடக்கம் வெள்ளி வரை**
**நேரடி வகுப்புக்கள், நிகழ் நிலை வகுப்புக்கள்**

PHYSICE
திரு.G.பிரபா, திரு.S.சோதிலிங்கம்:- 11.30 - 1.30 NOON

CHEMISTRY
திரு.S.T.உமாசங்கர், திரு.V.செல்வரஞ்சன்:- 9.30 - 11.30 AM

BIOLOGY
திரு.V.S.குணசீலன், திரு.T.கெங்காதரன்:- 8.00 - 9.30 AM

COM. MATHS
திரு.P.செந்தில்நாதன் :- 7.00 AM

**ஆரம்பம்: 07.03.2022** (CR 37165) (4/6)

Call: 077 791 7611, 076 566 3006, 076 569 3006
https:// facebook.com/newsciencehalljaffna

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் நாவற்குழியில் 90 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் (நிலப்பரப்பு)

- ☑ A9 வீதியில் இருந்து 150M தூரம்
- ☑ லங்கா அசோக் லேடன் வாகனவிற்பனை நிலையத்திற்கு அருகாமையில்
- ☑ நாவற்குழி சந்தியிலிருந்து 500 M தூரம்
- ☑ யாழ். பஸ் நிலையத்திலிருந்து 8 KM தூரம்
- ☑ 18 அடிப்பாதையுடன் இயற்கை சூழல்
- ☑ நன்னீர்ச்சூழல்

**தொடர்பு : குரு - 077 6234 204**
**077 2880 152, 076 6583 621,**
**077 9116 983**




(CS 18636) (4/6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.03.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.